# 3

# பொருளாதார மற்றும் சமூக உட்கட்டமைப்பு

*அரசாங்கம் இறுக்கமான வரவுசெலவுத்திட்ட தடைகளிற்கு மத்தியில் பொருளாதார மற்றும் சமூக உட்கட்டமைப்புக்களின் அபிவிருத்தி மற்றும் வழங்கல் என்பவற்றை 2019இன் முதலரைப்பகுதியில் தொடர்ந்தும் முன்னெடுத்திருந்தது. 2019இன் முதலரைப்பகுதியில் துறைமுகத் தொழிற்பாடுகள் மற்றும் தொலைத்தொடர்பூட்டல் துறை என்பன ஆரோக்கியமான வளர்ச்சியொன்றைக் காட்டியிருந்தன. அதேவேளை, மீளாய்வுக் காலப்பகுதியில் நாட்டின் விரைவுப்பாதை வலையமைப்பின் விரிவாக்கம் மற்றும் பல்வேறுபட்ட பிராந்திய வீதி வலையமைப்புக்கள் என்பவற்றுடன் தொடர்புடைய கட்டுமானப் பணிகள் தொடர்ந்தும் இடம்பெற்றன. எனினும், 2019இன் முதலரைப்பகுதியில் குறைவான நீர்மின்வலு உற்பத்தியின் காரணமாக மின்வலு உற்பத்தி குறிப்பிடத்தக்களவு பாதிக்கப்பட்டிருந்ததுடன் இது இலங்கை மின்சாரசபை மாச்சு மற்றும் ஏப்பிறல் மாதங்களில் மின் துண்டிப்பை மேற்கொள்வதற்கு நிர்ப்பந்தித்திருந்தது. அதேவேளை, உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் போக்குவரத்து துறையில் குறிப்பாக விமானப் போக்குவரத்தில் எதிர்மறையான தாக்கத்தைக் கொண்டிருந்தன. துறைமுக நகர செயற்றிட்டத்தின் காணி மீட்புப் பணிகள் 2019இன் முதலரைப்பகுதியில் பூர்த்திசெய்யப்பட்டுள்ளதுடன் கட்டுமானப் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மேலும், மீளாய்வுக்குக் காலப்பகுதியின்போது பல்வேறுபட்ட வீடமைப்பு மற்றும் நகர்புற அபிவிருத்தி செயற்றிட்டங்கள் செயற்பாட்டிலிருந்தன. பாடசாலைக் கல்விக்கால வீதத்தை அதிகரித்தல் மற்றும் கல்விக்கான சமவாய்ப்பைப் பெறுதல் என்பவற்றை நோக்காகக் கொண்ட ‘13 ஆண்டுகள் உத்தரவாதமளிக்கப்பட்ட கல்வி’ மற்றும் ‘அருகிலுள்ள பாடசாலை மிகச் சிறந்த பாடசாலை’ போன்ற அரசாங்கத்தின் புதிய கல்விக் கொள்கைகளின் நடைமுறைப்படுத்தலானது தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டன. சுகாதாரத் துறையை பொறுத்தவரையில், உலக சுகாதாரத் தாபனம் 2019 யூலையில் இலங்கை தட்டம்மை இல்லாத ஓர் நாடென பிரகடனப்படுத்தியிருந்த போதிலும் டெங்கு நோய் போன்ற அடிக்கடி ஏற்படும் தொற்றுக்கள் மற்றும் மலேரியா நோய் போன்ற ஏற்கனவே கட்டுப்படுத்தப்பட்ட பரவும் நோய்களின் மீள்பரவுகையின் சாத்தியம் மற்றும் அதிகரித்துவரும் தொற்றா நோய்கள் என்பன இத்துறையில் கடுமையான சவால்களை ஏற்படுத்தியுள்ளன.*

3

## பொருளாதார உட்கட்டமைப்பு அபிவிருத்திகள்


### பெற்றோலியம்

- **உலக மசகெண்ணெய் விலைகள் 2018இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுமிடத்து 2019இன் முதல் ஒன்பது மாதங்களில் குறைந்தளவில் காணப்பட்டன.** பீப்பாய் ஒன்றிற்கான சராசரி உலக மசகெண்ணெய் விலைகள் (பிறெண்ட்) முன்னைய ஆண்டின் அதே காலப்பகுதிக்கான ஐ.அ.டொலர் 72.65உடன் ஒப்பிடுகையில் 2019இன் முதல் ஒன்பது மாதங்களில் ஐ.அ.டொலர் 64.66ஆக காணப்பட்டது. 2019இன் ஆரம்பத்திலிருந்து அதிகரிக்கும் போக்கினை காட்டியிருந்த உலக மசகெண்ணெய் விலைகள் ஐக்கிய அமெரிக்கா - சீன நாடுகளுக்கிடையேயான வர்த்தக யுத்தத்தின் காரணமாக உலகக் கேள்வியில் ஏற்பட்ட மெதுவடைவுடன் தொடர்புடைய கரிசனைகள் மற்றும் ஐக்கிய அமெரிக்கா மற்றும் பெற்றோலியம் ஏற்றுமதி செய்யும் நாடுகளின் அமைப்பு என்பவற்றிடம் காணப்பட்ட அதிகளவான மசகெண்ணெய் இருப்புக்கள் என்பவற்றின் காரணமாக 2019 ஏப்பிறல் மாதத்தின் இறுதியிலிருந்து வீழ்ச்சியடைந்தன. அதன்படி, சராசரி மசகெண்ணெய் விலை பீப்பாய் ஒன்றிற்கு 2019 ஏப்பிறலின் ஐ.அ.டொலர் 71.45இலிருந்து யூனில் ஐ.அ.டொலர் 62.88இற்கு வீழ்ச்சியடைந்தது. எனினும், இவ்வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கானது மத்திய கிழக்கில் ஏற்பட்ட பூகோள அரசியல் பதற்றம் மற்றும் ஐக்கிய அமெரிக்காவின் நாணயக் கொள்கை இலகுபடுத்தலுடனான உலகக் கேள்வியின் மீட்சியினது எதிர்பார்க்கைகள் என்பனவற்றின் காரணமாக யூன் நடுப்பகுதியிலிருந்து பின்னோக்கி நகர்ந்தது. அதன்படி, சராசரி பிறெண்ட் விலை 2019 யூலை மாதத்தில் பீப்பாய் ஒன்றிற்கு ஐ.அ.டொலர் 64.31ஆகக் காணப்பட்டது. இருப்பினும், ஐக்கிய அமெரிக்கா-சீனா நாடுகளுக்கிடையிலான வர்த்தக யுத்தம் தீவிரமடைந்ததன் பின்னர் யூலை மாதத்தின் நடுப்பகுதியிலிருந்து பிறெண்ட் விலைகள் வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கினைக் காட்டியிருந்ததுடன் சராசரி பிறெண்ட் விலை 2019 ஓகத்து மாதத்தில் பீப்பாயொன்று ஐ.அ.டொலர் 59.76இற்கு வீழ்ச்சியடைந்திருந்தது. உலகில் அதிகளவில் எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகளில் ஒன்றான சவூதி அரேபியாவின் இரண்டு பிரதான எண்ணெய் உற்பத்தி வசதிகள் மீது பயங்கரவாதிகளால் மேற்கொள்ளப்பட்ட கொடூரமான தாக்குதல்களின் காரணமாக பிறெண்ட் விலைகள் கூர்மையாக 2019 செத்தெம்பர் இறுதியில் அதிகரித்ததுடன் அதன் பின்னர் பீப்பாயொன்றை ஐ.அ.டொலர் 60இற்குக் கீழ் நிலைப்படுத்தியிருந்தது. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் இறக்குமதி செய்யப்பட்ட மசகெண்ணெயின் பீப்பாயொன்றிற்கான சராசரி விலை 2018இன் தொடர்பான காலப்பகுதியின் ஐ.அ.டொலர் 76.49இலிருந்து 2019இன் முதல் எட்டு மாதத்தில் ஐ.அ.டொலர் 69.13இற்கு 9.6 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது.

- **2019இன் முதல் ஏழு மாதங்களில், எரிபொருளை அடிப்படையாகக் கொண்ட வலு உருவாக்கம் மற்றும் போக்குவரத்து துறையிலிருந்தான அதிகரித்த கேள்வி என்பவற்றுடன் பெற்றோலிய உற்பத்திகளின் உள்நாட்டு விற்பனைகள் வளர்ச்சியடைந்திருந்தன.** 2019இன் முதலரைப்பகுதியில் காணப்பட்ட வரட்சி காலநிலையின் விளைவாக ஏற்பட்ட நீர்மின்வலு உருவாக்கத்தில் குறைவடைவின் காரணமாக வலு உருவாக்கத்திற்கான உள்நாட்டு பெற்றோலிய உற்பத்திகளின் மொத்த விற்பனைகள் முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2019இன் முதல் ஏழு மாதங்களில் 50.1 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. அனல் மின்வலு உருவாக்கத்தின் மீதான அதிகரித்த தங்கியிருப்பின் காரணமாக உலை எண்ணெய் விற்பனைகள் 2018இன் அதே காலப்பகுதியுடன் ஒப்பிடுமிடத்து 2019இன் முதல் ஏழு மாதங்களில் 14.0 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. 2019இன் முதல் ஏழு மாதங்களில், இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தால் போக்குவரத்து துறைக்கான பெற்றோலிய உற்பத்திகளின் விற்பனைகள் 5.2 சதவீதத்தால் வளர்ச்சியடைந்திருந்தது. பெற்றோலிய உற்பத்திகள் போக்குவரத்து துறையிலிருந்தான அதிகரித்த கேள்வியைப் பிரதிபலித்து முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2019இன் முதல் ஏழு மாத காலப்பகுதியில் உள்நாட்டு பெற்றோலிய விற்பனைகள் 8.8 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. 2019இன் முதல் ஏழு மாத காலப்பகுதியில், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் உள்நாட்டு டீசல் விற்பனைகளும் 2018இன் முதல் ஏழு மாத காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 11.3 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. அதேவேளை, மண்ணெண்ணெய் விற்பனைகள் (உள்நாட்டு) ஆய்விற்கு உட்பட்ட காலப்பகுதியில் 9.3 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

வரைபடம் 3.1

பன்னாட்டுச் சந்தையில் மசகு எண்ணெயின் (பிறெண்ட்) சராசரி விலை மற்றும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் மசகு எண்ணெய்க்கான இறக்குமதி விலை




*மூலங்கள்:* புளூம்பேர்க்
இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

அட்டவணை 3.1

### இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சில்லறை வர்த்தக பெற்றோலிய விலைகளிலான அண்மைய திருத்தங்கள்

| உற்பத்தி | 11.05.18 இற்கு முன்னரான விலைகள் | 11.05.18 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்திலான விலைகள் | 11.07.19 இலுள்ளவாறான விலைகள் | 14.08.19 இலுள்ளவாறான விலைகள் | 11.09.19 இலுள்ளவாறான விலைகள் | 11.10.19 இலுள்ளவாறான விலைகள் |
|---|---|---|---|---|---|---|
| 92 ஒக்டேன் பெற்றோல் | 117.00 | 137.00 | 136.00 | 138.00 | 137.00 | 137.00 |
| 95 ஒக்டேன் பெற்றோல் | 128.00 | 148.00 | 159.00 | 163.00 | 161.00 | 161.00 |
| தன்னியக்க டீசல் | 95.00 | 109.00 | 104.00 | 104.00 | 104.00 | 104.00 |
| சிறப்பு டீசல் | 110.00 | 119.00 | 131.00 | 134.00 | 132.00 | 132.00 |
| மண்ணெண்ணெய் | 44.00 | 101.00 | 70.00 | 70.00 | 70.00 | 70.00 |
| கைத்தொழிலுக்கான மண்ணெண்ணெய் | 88.00 | 110.00 | 110.00 | 110.00 | 110.00 | 110.00 |

*மூலம்:* இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்


- **இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் அதிகரித்துச் செல்லும் இழப்புக்களை கருத்திற்கொண்டு அரசாங்கம் செலவினைப் பிரதிபலிக்கும் விலைச் சூத்திரத்தினை அமுலாக்குவதனூடாக ஆரம்பத்தில் 2018 மே மாதத்தில் உள்நாட்டு சில்லறை எரிபொருள் விலைகளைத் திருத்தியிருந்ததுடன் அதனைத் தொடர்ந்து கிரமமான விலைத் திருத்தங்களை மேற்கொண்டிருந்தது.** செலவினைப் பிரதிபலிக்கும் விலையிடல் பொறிமுறையின்படி உலகளாவிய பெற்றோலிய விலைகளின் அசைவுகளைக் கருத்திற்கொண்டு உள்நாட்டு சில்லறை எரிபொருள் விலைகளுக்கு மாதாந்த சீராக்கங்களை 2019இல் மேற்கொண்டிருந்தது. சந்தையில் ஏனைய முக்கிய பங்காளியான லங்கா ஐ.ஓ.சி நிறுவனமும் சில்லறை விலைகளை அதன்படி திருத்தியிருந்தது. அதன் விளைவாக, 2019 ஒத்தோபர் மாதமளவில் லீற்றர் ஒன்றிற்கான பெற்றோல் (92 ஒக்டேன்), பெற்றோல் (95 ஒக்டேன்), தன்னியக்க டீசல், சிறப்பு டீசல், மண்ணெண்ணெய் மற்றும் கைத்தொழில் மண்ணெண்ணெய் என்பவற்றுக்கான இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் நிருவகிக்கப்பட்ட சராசரி விலைகள் முறையே ரூ.137.00, ரூ.161.00, ரூ.104.00, ரூ.132.00, ரூ.70.00 மற்றும் ரூ.110.00 என்ற மட்டங்களில் தீர்மானிக்கப்பட்டிருந்தன.

#### மின்வலு

- **2019 முதல் ஏழு மாதகாலப்பகுதியில், கூரையில் பொருத்தப்பட்ட சூரிய மின்வலு உருவாக்கம் நீங்கலான மொத்த மின்வலு உருவாக்கம் 2018இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 8,809.8 கி.வா.ம உடன் ஒப்பிடுகையில் 9,271.4 கி.வா.ம இற்கு 5.2 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.** 2019இன் முதலரைப்பகுதியில் அனுபவிக்கப்பட்ட வரட்சி காலநிலை நிலைமைகளுக்கு மத்தியில் நீர்மின்வலு உருவாக்கமானது 2018இன் அதேகாலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் ஆண்டின் முதல் ஏழு மாத காலப்பகுதியில் 37.9 சதவீதத்தால் 1,539.2 கி.வா.ம இற்கு கணிசமானளவால் வீழ்ச்சியடைந்திருந்தது. இதன் விளைவாக, நீர்மின்வலு உருவாக்கத்தின் வீழ்ச்சியை சரியீடு செய்வதற்கு அனல் மின்வலு உருவாக்கமானது கணிசமாக அதிகரித்திருந்தது. அதன்படி, எரிபொருள் எண்ணெய் அடிப்படையாகக் கொண்ட வலு உருவாக்கம் மற்றும் நிலக்கரி வலு உருவாக்கம் என்பன 2018இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2019இன் முதல் ஏழு மாதகாலப்பகுதியில் முறையே 3,616.1 கி.வா.ம மற்றும் 3,397.7 கி.வா.ம என்பவற்றுக்கு 44.5 சதவீதம் மற்றும் 18.2

வரைபடம் 3.2

### மின் உருவாக்கக் கலவை (சனவரி - யூலை)




*மூலம்:* இலங்கை மின்சார சபை

3


சதவீதம் என்பவற்றால் அதிகரித்திருந்தது. அதேவேளை, கூரையில் பொருத்தப்பட்ட சூரிய மின்சக்தி நீங்கலாக பாரம்பரியமற்ற மீள்புதுப்பிக்கத்தக்க வலு மூலங்களின் ஊடான வலு, உருவாக்கம் 2018இன் அதேகாலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2019இன் முதல் ஏழு மாதங்களில் 718.3 கி.வா.ம இற்கு 24.6 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தது. இது மிக முக்கியமாக வரட்சி காலநிலை நிலைமையின் விளைவாக சிறிய நீர்மின்வலு பொறித்தொகுதியிலிருந்தான வலு உருவாக்கத்தின் வீழ்ச்சியினால் ஏற்பட்டதாகும். 2019இன் முதலரைப்பகுதியில், நாட்டின் மொத்த வலு உருவாக்கத்திற்கு கூரை சூரிய மின்வலுவும் 63.6 கி.வா.ம பங்களித்திருந்தது. அதன்படி, 2019இன் முதல் ஏழு மாதங்களில் கூரையில் பொருத்தப்பட்ட சூரிய மின்சக்தி நீங்கலாக மொத்த வலு உருவாக்கத்திற்கு நீர்மின்வலு, எரிபொருள் எண்ணெய், நிலக்கரி மற்றும் பாரம்பரியமற்ற புதுப்பிக்கத்தக்க வலு மூலங்கள் என்பன முறையே 17 சதவீதம், 39 சதவீதம், 37 சதவீதம் மற்றும் 8 சதவீதத்திற்கு வகைகூறியிருந்தன. மாச்சு மற்றும் ஏப்பிறல் மாதங்களில், மின்வலு உருவாக்கத்தின் இயலளவில் ஏற்பட்ட வரையறைகள் மற்றும் வரட்சி காலநிலை நிலமைகளின் கீழான அதிகரித்த மின்வலுவுக்கான கேள்வி என்பவற்றின் காரணமாக இலங்கை மின்சார சபை பட்டியலிடப்பட்ட நாளாந்த மின் துண்டிப்பை மேற்கொள்வதற்கு கட்டாயப்படுத்தப்பட்டிருந்தது. எனினும், 2019 ஏப்பிறல் 11இலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் பட்டியலிடப்பட்ட மின் துண்டிப்புக்கலின் முடிவுறுத்தப்பட்டன. ஆய்விற்குரிய காலப்பகுதியில், நாட்டின் மொத்த வலு உருவாக்கத்தில் 71.1 சதவீதத்தை இலங்கை மின்சார சபை பங்களித்திருந்த அதேவேளை எஞ்சியவை சுயாதீனமான வலு உற்பத்தியாளர்களினால் உருவாக்கப்பட்டிருந்தன. மொத்த வலு உருவாக்கத்தில் ஊடுகடத்தல் மற்றும் விநியோக இழப்பானது 2018இன் முதல் ஏழு மாதங்களில் காணப்பட்ட 8.2 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2019இன் முதல் ஏழு மாதங்களில் 8.1 சதவீத பெறுமதியாகவிருந்தது.

- **2019இன் முதல் ஏழு மாதங்களில் மொத்த மின்வலு விற்பனைகள் 2018இன் தொடர்பான காலப்பகுதியின் 8,089.6 கி.வா.ம உடன் ஒப்பிடுகையில் 8,518.9 கி.வா.ம இற்கு 5.3 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.** மின்வலு கேள்விக்கான வளர்ச்சியானது பிரதானமாக "பொது நோக்கம்" மற்றும் "வீட்டலகு" துறைகள் என்பவற்றிலிருந்தான கேள்விகளால் தூண்டப்பட்டிருந்ததுடன் இது முன்னைய ஆண்டின் அதேகாலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2019இன் முதல் ஏழு மாதங்களில் முறையே 6.5 சதவீதம் மற்றும் 6.3 சதவீதம் என்பவற்றால் வளர்ச்சியடைந்திருந்தது. மொத்த மின்வலு விற்பனைகளில், "பொது நோக்கம்" மற்றும் வீட்டலகு துறைகள் என்பன முறையே 21.1 சதவீதம் மற்றும் 32.9 சதவீதத்தை உள்ளீர்த்திருந்தன. மேலும், மொத்த மின்வலு விற்பனைகளில் 29.7 சதவீதத்திற்கு வகைகூறிய "கைத்தொழில்" வகைகளின் மின்வலு நகர்வு முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுமிடத்து 2019இன் முதல் ஏழு மாதங்களில் 4.1 சதவீதத்தால் வளர்ச்சியடைந்திருந்தது. அதேவேளை, நாட்டிற்கான பொருத்தப்பட்ட மின்வலு உருவாக்கத்தின் மொத்த இயலளவு 2019இன் யூலை மாதத்தின் இறுதியில் 4,281.33 மெகா வாற்றாகக் காணப்பட்டது.

- **பல பாரியளவிலான நீர்மின்வலு செயற்றிட்டங்கள் மற்றும் அனல் மின்வலு செயற்றிட்டங்கள் என்பவற்றின் கட்டுமானப்பணிகள் 2019இன் முதலரைப்பகுதியில் நடைபெற்றுக்கொண்டிருந்த அதேவேளை மேலும் சில அனல் மின்வலு பொறித்தொகுதியினை நிருமானிப்பதற்கான திட்டங்களும் காணப்பட்டன.** ஆய்விற்குரிய காலப்பகுதியில், இலங்கை மின்சார சபையானது இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் ஒப்புதலிற்காக 2020-2039 காலப்பகுதிக்கான வருடாந்த குறைந்த செலவிலான நீண்டகால மின்சார உற்பத்தி விரிவாக்கத் திட்டத்தினை சமர்ப்பித்திருந்தது. 2039 இறுதியளவில் அடையப்படவேண்டிய குறைந்த செலவிலான நீண்டகால மின்சார உற்பத்தி விரிவாக்கத் திட்டத்தின் ஊடான வலுக்கலவையானது 30 சதவீதம் கொண்ட இயற்கை வாயு, 30 சதவீதம் கொண்ட நிலக்கரி வலு, 25 சதவீதமான பாரியளவான நீர்மின்வலு மற்றும் உலை எண்ணெய் மற்றும் வேறு ஏனைய மின் உற்பத்தி செய்யக்கூடிய வலு மூலங்களிலிருந்தான 15 சதவீதம் என்பவற்றை உள்ளடக்கியிருந்தது. அதேவேளை, புறோட்லாண்ட்ஸ் நீர்மின்வலு செயற்றிட்டம், உமா ஓயா நீர்மின்வலு செயற்றிட்டம், சீதாவக்கை நீர்மின்வலு செயற்றிட்டம் மற்றும் மொறகொல்ல நீர்மின்வலு செயற்றிட்டம் போன்றவற்றின்

வரைபடம் 3.3

புதிய மின்வலு இணைப்புக்கள் (எண்ணிக்கை)




மூலம்: இலங்கை மின்சார சபை

கட்டுமான வேலைகள் முறையே 35 மெ.வா, 122 மெ.வா, 24 மெ.வா மற்றும் 30.2 மெ.வா. என்ற எதிர்பார்க்கப்பட்ட இயலளவுகளுடன் தொடர்ந்தும் செயலிலுள்ளன. கெரவலப்பிட்டியவில் அமைந்துள்ள இயற்கை வாயுவுடன் இணைக்கப்பட்ட சுழற்சி வலு பொறித்தொகுதி 2022 ஆண்டளவில் தேசிய மின்தொகுதிக்கு 300 மெ.வா கொண்ட மேலதிக இரண்டு அலகுகளைச் சேர்த்துக் கொள்ளுமென எதிர்பார்க்கப்படுகின்றன. மேலும், மன்னார் மற்றும் பூநகரி காற்று மின்வலு பூங்காக்கள் என்பவற்றுடன் தொடர்புடைய சூழல் தாக்க மதிப்பீடுகள் போன்ற முற்கட்டுமான வேலைகள் தொடர்ந்து இடம்பெறுவதுடன் இவைகள் தேசிய மின்தொகுதிக்கு முறையே 100 மெ.வா. மற்றும் 170 மெ.வா. இணைத்துக்கொள்ளும்.

## வீதி அபிவிருத்தி

- **அரசாங்கம் 2019இன் முதலரைப்பகுதியில் நாட்டின் வீதி வலையமைப்பை தொடர்ச்சியாக முன்னேற்றியிருந்தது.** வீதி அபிவிருத்தி அதிகாரசபை விரைவுப் பாதைகள் உள்ளடங்கலாக 12,390 மொத்த நீளம் கொண்ட தேசிய பெருந்தெருக்கள் மற்றும் ஏறத்தாழ 4,662 பாலங்கள் என்பவற்றை ஆண்டின் முதலரைப்பகுதியில் பேணியிருந்தது. வீதிகள் மற்றும் பாலங்கள் தொடர்பில் அவற்றின் கட்டுமானம், பேணல் மற்றும் புனரமைத்தல் என்பவற்றின் மீது வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் ஏற்படுத்தப்பட்ட மொத்த செலவினம் 2018இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுமிடத்து 2019இன் முதலரைப்பகுதியில் ரூ.83.8 பில்லியனுக்கு 43.3 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. ஆய்விற்குரிய காலப்பகுதியில், வட மத்திய மாகாணத்தின் 115 கிராமிய வீதிகளுடன் தொடர்புடைய கட்டுமான வேலைகள் நிறைவுசெய்யப்பட்டிருந்த அதேவேளை மரதன்கடவல-ஹபரான வீதி, கராப்பிட்டிய-நாகொட வீதி மற்றும் உடுகம பார் சந்தி-தவலம வீதி போற்றவற்றிற்கான வீதி முகாமைத்துவ ஒப்பந்தங்கள் ஒருங்கிணைப்பட்ட வீதி முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் I (i-வீதி I) என்பதன் கீழ் வழங்கப்பட்டதுடன் இவை ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியியல் உதவியுடன் அமுல்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும், 2019இன் முதலரைப்பகுதியில் எழுச்சியடைந்துவரும் பொலன்னறுவை மாவட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தெஹியத்தக்கண்டிய - அரலகன்வில வீதியில் 21 கிலோ மீற்றர் புனரமைப்புச் செய்யப்பட்டது. அதேவேளை, தெற்கு வீதி வலையமைப்புச் செயற்றிட்டம், பதுளை-செங்கலடி வீதி முன்னேற்ற செயற்றிட்டம் மற்றும் முன்னுரிமை வீதிகளின் செயற்றிட்டம் 3 - கட்டம் I என்பனவும் இக்காலப்பகுதியில் தொடரப்பட்டன. மேலும், ‘மக நெகும’ கிராமிய வீதி மீளெழுச்சி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சிமேந்து கற்கள் மூலம் சிமெந்து இடல் மற்றும் நடைபாதைகளுக்கு சிமெந்து இடல் என்பன மொத்தமாக 89.7 கி.மீ நீளம் கொண்ட வீதிகளுக்கு நிறைவு செய்யப்பட்டன. பேலியகொடயில் அமைக்கப்படுகின்ற களனி ஆற்றின் புதிய பாலம் கட்டுமானச் செயற்றிட்டத்தின் கீழ் இரும்புப் பாலம் மற்றும் விரிவாக்கப்பட்ட பாலம் என்பனவும் ஆண்டுக் காலப்பகுதியில் தொடரப்பட்டன. மேலும், இராஜகிரியவிலிருந்து அத்துருகிரிய வரையான உயர் பெருந்தெருக்களின் இரண்டாம் கட்டத்தின் சாத்திய கற்கைகள் ஆய்விற்குரிய காலப்பகுதியில் நிறைவு செய்யப்பட்டன. 2019இன் முதலரைப்பகுதியில் தேசிய பெருந்தெருக்களில் 25 பாலங்களின் மீள்கட்டுமானங்களும் தொடரப்பட்டன.

- **2019இன் முதலரைப்பகுதியில், தேசிய விரைவுப்பாதை வலையமைப்பின் விரிவாக்கத்திற்கான கட்டுமான வேலைகளும் தொடரப்பட்டன.** அதன்படி, ஆய்விற்குரிய காலப்பகுதியில், 2019 திசெம்பரில் நிறைவு செய்யப்படுமென அட்டவணையிடப்பட்டுள்ள வெளிச்சுற்று வட்டப்பாதையின் கட்டம் III இன் சிவில் பணிகள் வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் மேற்கொள்ளப்பட்டன. அதேவேளை, தெற்கு அதிவேக விரைவுப்பாதை செயற்றிட்டம் மற்றும் மத்திய அதிவேக விரைவுப்பாதை செயற்றிட்டத்தின் மீரிகம-குருணாகல் பகுதி என்பவற்றின் கட்டுமான வேலைகளும் 2019இன் முதலரைப்பகுதியில் தொடர்ந்தன. மீரிகம-குருணாகல் பகுதியின் மொத்த நீளமானது 39.9 கிலோ மீற்றராகும்.

3

## வீதிப் பயணிகள் போக்குவரத்து

- **2019இன் முதலரைப்பகுதியில் வீதிப் பயணிகள் போக்குவரத்து மெதுவான செயலாற்றத்தைப் பதிவுசெய்திருந்தது.** 2019இன் முதலரைப்பகுதியில் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் தொழிற்படுத்தப்பட்ட மொத்த கிலோமீற்றர்கள் 213.3 மில்லியனுக்கு 2.8 சதவீத குறைவொன்றை அறிக்கையிட்ட அதேவேளை, மொத்த பயணிகள் கிலோ மீற்றரானது 7,109.7 மில்லியன் கிலோ மீற்றருக்கு 5.9 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது. இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்துகளின் எண்ணிக்கை 2019 யூன் மாதத்தின் இறுதியில் 6,996ஆகக் கணப்பட்டதுடன் இது 2018இன் யூன் இறுதியில் அறிக்கையிடப்பட்ட 7,746 பேருந்துகளிலிருந்தான குறைவொன்றாகக் காணப்பட்டது. அதேவேளை, முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2019இன் முதலரைப்பகுதியின்போது தனியார் பேருந்து தொழிற்படுத்துநர்களின் தொழிற்படுத்தப்பட்ட கிலோ மீற்றர் 540.7 மில்லியன் கிலோ மீற்றருக்கு 2.4 சதவீதத்தால் குறைவடைந்ததுடன் பயணிகள் கிலோ மீற்றர் 27,023.9 மில்லியன் கிலோ மீற்றருக்கு 2.3 சதவீதத்தால்

3

அட்டவணை 3.2
வீதிப் பயணிகள் போக்குவரத்துத் துறையின் செயலாற்றம்

| விடயம் | 2018 சன-யூன் | 2019 சன-யூன்(அ) | மாற்றம் % |
|---|---|---|---|
| இலங்கை போக்குவரத்துச் சபை | | | |
| தொழிற்பட்ட கிலோ மீற்றர்கள் (மில்லியன்) | 220 | 213 | -2.8 |
| பயணிகள் கிலோ மீற்றர்கள் (மில்லியன்) | 7,552 | 7,110 | -5.9 |
| சொந்தமான பேருந்துகளின் எண்ணிக்கை | 7,746 | 6,996 | -9.7 |
| தொழிற்பட்ட பேருந்துகளின் சராசரி எண்ணிக்கை | 6,020 | 5,832 | -3.1 |
| தனியார் துறை | | | |
| தொழிற்பட்ட கிலோ மீற்றர்கள் (மில்லியன்) | 554 | 541 | -2.4 |
| பயணிகள் கிலோ மீற்றர்கள் (மில்லியன்) | 27,668 | 27,024 | -2.3 |
| சொந்தமான பேருந்துகளின் எண்ணிக்கை | 20,088 | 20,016 | -0.4 |
| தொழிற்பட்ட பேருந்துகளின் சராசரி எண்ணிக்கை | 19,165 | 18,662 | -2.6 |
| வழங்கப்பட்ட மாகாணங்களுக்கிடையிலான அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை | 3,164 | 3,133 | -1.0 |
| வழங்கப்பட்ட மாகாணங்களுக்குள்ளேயான அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை | 16,924 | 16,833 | -0.5 |

(அ) தற்காலிகமானது

*மூலங்கள்:* இலங்கை போக்குவரத்துச் சபை
தேசிய போக்குவரத்து ஆணைக்குழு

குறைவடைந்தது. பொது மற்றும் தனியார் பேருந்து தொழிற்பாடுகளின் இக்குறைவானது பிரதானமாக உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் தாக்கத்தின் காரணமாக ஏற்பட்டதாகும். அதேவேளை, முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2019 யூன் மாதத்தின் இறுதியிலுள்ளவாறு தனியார் தொழிற்படுத்துநர்களிற்கு வழங்கப்பட்ட மாகாணங்களுக்கிடையிலான மற்றும் மாகாணத்திற்குள்ளான அனுமதிப்பத்திரங்கள் முறையே 3,133 மற்றும் 16,833ஆகக் காணப்பட்டன.

- **2019இன் முதலரையாண்டின் போது இலங்கைப் போக்குவரத்துச் சபை மற்றும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு என்பன பொதுப்போக்குவரத்து முறைமையினை மேம்படுத்துவதற்கான தமது ஆதரவு நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் முன்னெடுத்திருந்தன.** அதன்படி, இலங்கைப் போக்குவரத்துச் சபையுடன் இணைந்து தேசிய போக்குவரத்து ஆணைக்குழு, பின்னிரவு மற்றும் அதிகாலை வேளைகளில் நம்பகமான மற்றும் ஒழுங்கான பேருந்துப் பணிகள், கிராமப்பகுதியில் வாழும் மக்களுக்கான பேருந்துப் பணி கிடைப்பனவை மேம்படுத்துதல் மற்றும் பாடசாலை மாணவர்களிற்காக உரிய நேரத்தில் பேருந்து பணிகளை வழங்குதல் போன்றவற்றுக்காக நிசிசெரிய, கெமிசெரிய மற்றும் சிசுசெரிய பணிகள் போன்ற தமது விசேட பயணிகள் போக்குவரத்துப் பணிகளைத் தொடர்ந்தும் முன்னெடுத்திருந்தது. மேலும், இலங்கைப் போக்குவரத்துச் சபை விசேட தினங்களில் பயணிகள் போக்குவரத்தை வசதிப்படுத்துவதற்காக விசேட பேருந்துப் பணிகளை ஒழுங்கமைத்திருந்தது. அதேவேளை, இலங்கைப் போக்குவரத்துச் சபை சிறந்த தரத்திலான போக்குவரத்துப் பணிகளை வழங்கும் நோக்குடன் ஒன்பது சொகுசு பேருந்துகளை வழங்கியுள்ளதுடன் அப்பேருந்துகள் ஆறு பேருந்துசாலைகளில் ஒதுக்கப்பட்டுள்ளன. இவ்வேளையில், 2019இன் முதலரையாண்டின் போது தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தின் வழிகாட்டுதலின் கீழ் தெரிவுசெய்யப்பட்ட 12 பேருந்துச்சாலைகளில் ஒரு மாதிரி பேருந்து சாலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. மேலும், 2019இன் முதலரையாண்டில் சிக்கனமற்ற வழிப்பாதைகளின் தொழிற்பாடு மற்றும் மானிய பருவகால சீட்டுக்களிற்காக ஒவ்வொன்றும் ஏறத்தாழ ரூ. 2.5 பில்லியன் பெறுமதியுடைய மானியங்கள் அரசாங்கத்தினால் வழங்கப்பட்டன. அதேவேளை, தேசிய போக்குவரத்து ஆணைக்குழு மாகாணங்களுக்கிடையிலான பேருந்துப் பணிக்காக இணையத்தனூடான இருக்கைப் பதிவுப் பணிகளைத் தொடர்ந்து முன்னெடுத்திருந்ததுடன் பொதுமக்களின் போக்குவரத்து விருப்பத்தேர்விற்கு உதவும் நோக்குடன் கூகுள் ட்ரான்ஸிற் வசதியை இலங்கையில் அறிமுகப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தது. 2019இன் முதல் ஆறு மாத காலப்பகுதியில் பல்வேறு சந்தர்ப்பங்களில் உள்நாட்டு எரிபொருட்களின் விலைத்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தாலும், 2018 திசெம்பர் 26இலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் 4 சதவீதத்தால் பேருந்து கட்டணங்கள் குறைக்கப்பட்டதன் பின்னர் பேருந்துக் கட்டணத் திருத்தங்கள் எவையும் இடம்பெறவில்லை. தனியார் துறையுடன் இணைந்து இலாபப்பகிர்வு அடிப்படையில் இலங்கை போக்குவரத்துச் சபையின் பெயரின் கீழ் சுமார் 2,000 பேருந்துகளை கொள்வனவு செய்வதற்கான முன்மொழிவொன்று கலந்தாலோசிக்கப்பட்டு வருகின்றது.

- **2019இன் முதல் ஒன்பது மாத காலப்பகுதியில் புதிய ஊர்திகளின் பதிவு முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் குறைவடைந்துள்ளது.** 2019இன் முதல் ஒன்பது மாதங்களில், பதிவுசெய்யப்பட்ட புதிய ஊர்திகளின் மொத்த எண்ணிக்கை 2018இன் முதல் ஒன்பது மாதங்களுடன் ஒப்பிடுகையில் 23.3 சதவீதத்தால் 286,126ஆகக் குறைவடைந்திருந்தது. நாட்சில்லு வண்டிகள் மற்றும் ஊர்தி இல்லங்கள் தவிர ஏனைய எல்லா

அட்டவணை 3.3
உந்து ஊர்திகளின் புதிய பதிவு

| விடயம் | 2018 சன-செத் | 2019 சன-செத்(அ) | மாற்றம் % |
|---|---|---|---|
| பேருந்துகள் | 2,383 | 1,099 | -53.9 |
| உந்து ஊர்திகள் | 63,863 | 28,574 | -55.3 |
| முச்சக்கர வண்டிகள் | 15,118 | 12,144 | -19.7 |
| இரட்டை நோக்கங்களுக்கான ஊர்திகள் | 13,302 | 9,933 | -25.3 |
| உந்து ஈருளிகள் | 263,004 | 223,728 | -14.9 |
| பொருட்கள் கொண்டு செல்லும் ஊர்திகள் | 7,522 | 4,136 | -45.0 |
| நில ஊர்திகள் | 7,187 | 5,531 | -23.0 |
| நாற்சில்லு வண்டி மற்றும் மோட்டார் மனை | 654 | 981 | 50.0 |
| மொத்தம் | 373,033 | 286,126 | -23.3 |

(அ) தற்காலிகமானது

*மூலம்:* போக்குவரத்துத் திணைக்களம்

ஊர்தி வகைகளினதும் பதிவுகளானது குறிப்பிடத்தக்க குறைவொன்றைப் பதிவு செய்திருந்தன. மீளாய்விற்குட்பட்ட காலப்பகுதியில், பொருளாதார நடவடிக்கையில் ஏற்பட்ட ஒட்டுமொத்த மெதுவடைவு மற்றும் அரசாங்கம் மற்றும் மத்திய வங்கியினால் வாகனங்களின் இறக்குமதியைக் கட்டுப்படுத்துவதற்காக எடுக்கப்பட்ட கொள்கை வழிமுறைகள் என்பன ஊர்திப் பதிவின் குறைவிற்கு காரணமாக அமையலாம்.

## புகையிரதப் போக்குவரத்து

- **இலங்கைப் புகையிரதம் 2019இன் முதலரைப்பகுதியில் பயணிகள் மற்றும் சரக்கு போக்குவரத்து ஆகிய இரண்டிலும் வீழ்ச்சியொன்றை அனுபவித்திருந்தது.** புகையிரதம் பயணிகள் கிலோ மீற்றர் தூரம் 2018இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 3.7 பில்லியன் கிலோ மீற்றர் தூரத்திலிருந்து 2019இன் முதலரைப்பகுதியில் 3.6 பில்லியன் கிலோ மீற்றருக்கு 4.4 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தது. அதேவேளை, 2019இன் முதலரைப்பகுதியில் காணப்பட்ட 61.2 மில்லியன் கொண்ட சரக்குகளின் கிலோமீற்றரும் முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுமிடத்து 3.6 சதவீத வீழ்ச்சியைப் பதிவுசெய்திருந்தது. பயணிகள் மற்றும் சரக்குகளின் போக்குவரத்து புகையிரதப் போக்குவரத்து பணியாளர்களால் மேற்கொள்ளப்பட்ட இரண்டு வேலைநிறுத்தப் போராட்டங்கள் மற்றும் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்கள் என்பவற்றால் பாதிக்கப்பட்டிருந்தன.

- **இலங்கைப் புகையிரதம் வினைத்திறனானப் பயணிகள் மற்றும் சரக்குப் போக்குவரத்துப் பணிகளை வழங்கும் நோக்கில் 2019இன் முதலரைப்பகுதியில் பல்வேறுபட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி செயற்றிட்டங்களைத் தொடர்ந்திருந்தது.** 2019இன் முதலரைப்பகுதியில், கட்டுநாயக்க-கொச்சிகடை புகையிரதப் பாதையின் இரட்டைப் பாதை மற்றும் கண்டி-பேராதெனிய-கடுகன்னாவ பிரிவுகளின் புனரமைப்பு வேலைகள் என்பன தொடர்ந்திருந்த அதேவேளை ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியியல் உதவியுடன் கீழ் மேற்கொள்ளப்படும் கொழும்பு புறநகர் புகையிரதச் செயற்றிட்டத்துடன் தொடர்புடைய ஆரம்பக்கட்ட வேலைகள் தொடர்ந்தும் இடம்பெற்று வந்திருந்தன. இலங்கைப் புகையிரதத்தின் கொழும்பு புறநகர் புகையிரதச் செயற்றிட்டமானது புதிய புகையிரதப் பாதைகளின் கட்டுமானம், புதிய சமிஞ்ஞை முறைகளின் நிருமானம் தற்போது காணப்படுகின்ற புகையிரதப் பாதைகள் புனரமைப்பு மற்றும் புகையிரத நிலையங்களின் அபிவிருத்தி, வாகன தரிப்பிட வசதிகள் மற்றும் பல்மாதிரி போக்குவரத்து மையம் என்பவற்றுடன் தொடர்புடைய நடவடிக்கைகளை உள்ளடக்குகின்றது. அதன்படி, இலங்கைப் புகையிரதம் கொழும்பு புறநகர் புகையிரதச் செயற்றிட்டத்தின் கீழ் களனி பள்ளத்தாக்கு புகையிரதப் பாதை, ரம்புக்கன-கொழும்பு கோட்டை பிரதான புகையிரதப்பாதை களுத்துறை-கொழும்பு கோட்டை கரையோர புகையிரதப் பாதை மற்றும் நீர்கொழும்பு - கொழும்பு கோட்டை புகையிரத பாதை போன்றவற்றை முன்னேற்றுவதற்கு திட்டமிட்டுள்ளது. மேலும், மாகோவிலிருந்து ஓமந்தை வரையான புகையிரத பாதையின் புனரமைப்பு செயற்றிட்டத்தின் ஒப்பந்த உடன்படிக்கையை கைச்சாத்திடுவதற்கான ஆரம்பகட்ட வேலைகள் நிறைவுசெய்யப்பட்டுள்ளன. அதேவேளை, இலங்கைப் புகையிரதம் 2019இன் முதலரைக் காலப்பகுதியில் புகையிரத தளங்களின் புதுப்பிப்பு, பயணிகள் மேல்நிலைப் பாலங்கள், கடவைப் பாதை முறைமைகள், தொலைத்தொடர்பு முறைமைகளின் சமிஞ்ஞை மற்றும் புகையிரத நிலையங்களின் கூரைகள் போன்றவைகளை நாடு முழுவதுமுள்ள புகையிரத நிலையங்களில் புனரமைப்பு செய்வதற்கான செயற்றிட்டங்களை தொடர்ந்திருந்தது. ஆய்விற்குரிய காலப்பகுதியில், இந்தியக் கடனின் கீழ் புதியதொரு புகையிரத இயந்திரமும் பல்பரிமான டீசல் அலகொன்றும் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. மேலும், பயணிகள் வண்டிகள், வலுத்தொகுப்புக்கான சீரமைப்பு, புகையிரத இயந்திரங்கள், சரக்கு வண்டிகள் மற்றும் ரயில் பேருந்துகள் என்பனவற்றின் புனரமைப்பு மற்றும் பொறித்தொகுதி மற்றும் இயந்திரங்களின் பேணல் மற்றும் சீரமைப்பு என்பனவும் தொடரப்பட்டிருந்தன.

அட்டவணை 3.4

இலங்கை புகையிரதத்தின் செயலாற்றம்

| விடயம் | 2018 சன-யூன் | 2019 சன-யூன்(அ) | மாற்றம் % |
|---|---|---|---|
| செயற்படுத்தப்பட்ட கிலோமீற்றர் (மில்) | 5.9 | 5.8 | -1.4 |
| பயணிகள் கிலோமீற்றர் (மில்) | 3,738 | 3,573 | -4.4 |
| சரக்குத் தொன் கிலோமீற்றர் (மில்) | 63.5 | 61.2 | -3.6 |

(அ) தற்காலிகமானது

*மூலம்:* இலங்கை புகையிரதம்

## வான்வழிப் போக்குவரத்து

- **வான்வழிப் போக்குவரத்து துறையானது உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் காரணமாக 2019இன் முதலரைப்பகுதியில் பயணிகள் மற்றும் சரக்குக்கையாளல் அசைவுகள் ஆகிய இரண்டிலும் மெதுவடைவொன்றைப் பதிவுசெய்திருந்தது.** அதன்படி, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் மாற்றிச்செல்லும் பயணிகள் உள்ளடங்கலாக மொத்த பயணிகள் அசைவுகள் முன்னைய ஆண்டின் அதே காலப்பகுதியுடன் ஒப்பிடுமிடத்து 2019இன் முதலரைப்பகுதியில் 5.8 மில்லியனுக்கு 19.0 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தது. பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் மொத்த விமானங்களின் அசைவுகள் 2018இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 34,294 இலிருந்து 2019இன் முதலரைப்பகுதியில் 30,986 இற்கு 9.6 சதவீதமான மெதுவடைவொன்றை பதிவுசெய்திருந்தது. பண்டாரநாயக்க

3

3

சா்வதேச விமானநிலையத்தால் கையாளப்பட்ட சரக்குகளின் மொத்த அளவு முன்னைய ஆண்டின் அதே காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 10.0 சதவீத வளா்ச்சியுடன் ஒப்பிடுமிடத்து 2019இன் முதலரைப்பகுதியில் 8.0 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தது. அதேவேளை, மத்தள ராஜபக்ஷ சா்வதேச விமானநிலையம் 2018இன் தொடா்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 281 விமானங்களுடன் ஒப்பிடுகையில் 2019இன் முதலரைப்பகுதியில் 585 விமானங்களின் அசைவுகளைக் கையாண்டிருந்தது. எனினும், சா்வதேச விமானங்கள் அசைவுகளின் எண்ணிக்கை முன்னைய ஆண்டின் அதே காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 247 அசைவுகளிலிருந்து ஆய்விற்குரிய காலப்பகுதியில் 88இற்கு வீழ்ச்சியடைந்திருந்தது. மத்தள ராஜபக்ஷ சா்வதேச விமானநிலையத்திலான பயணிகள் அசைவுகள் 1,289 பயணிகளுக்கு 42.9 சதவீதத்தால் மேலும் வீழ்ச்சியடைந்த அதேவேளை 2019இன் முதலரைப்பகுதியில் எவ்விதமான சரக்குக்கையாளல் நடவடிக்கைகளும் மத்தள ராஜபக்ஷ விமானநிலையத்தில் இடம்பெறவில்லை. மொத்த பயணிகள் அசைவுகளில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு மத்தள ராஜபக்ஷ விமானநிலையத்திலான குறைந்தளவிலான சா்வதேச விமானங்களின் அசைவுகள் மற்றும் மத்தள ராஜபக்ஷ விமானநிலையத்தினூடாக செயற்படுத்தப்பட்ட உள்நாட்டு விமானங்களின் மட்டுப்படுத்தப்பட்ட ஆசனங்களின் இயலளவு என்பன பிரதான காரணங்களாகும். மேலும், உள்நாட்டு பணிகளுடன் தொடா்புடைய பயணிகளின் அசைவுகளும் 2018இன் தொடா்பான காலப்பதியுடன் ஒப்பிடுமிடத்து 2019இன் முதலரைப்பகுதியில் 15.2 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தது. உள்நாட்டு பயணிகளின் அசைவுகளில் ஏற்பட்ட வீழ்ச்சியானது உயிா்த்த ஞாயிறு தாக்குதல்களைத் தொடா்ந்து குறிப்பாக மே மற்றும் யூன் மாதங்களில் அவதானிக்கப்பட்டிருந்தது.


- **நாட்டில் விமானநிலையம் மற்றும் வான்வழிப் போக்குவரத்துத் துறை என்பவற்றை அபிவிருத்தி செய்யும் நோக்கில் அரசாங்கம் மற்றும் வான்வழிப் போக்குவரத்துடன் தொடா்புடைய முகவா்களால் முன்னைய ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறுபட்ட செயற்றிட்டங்கள் 2019இன் முதலரைப்பகுதியிலும் தொடரப்பட்டன.** பண்டாரநாயக்க பன்னாட்டு விமானநிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட விமான ஓடுபாதைகள் மற்றும் வண்டிகளுக்கான பாதைகளின் கட்டுமானச் செயற்றிட்டம் 2019ஆம் ஆண்டின் முதலரைப்பகுதியில் தொடரப்பட்டிருந்ததுடன் யூன் இறுதியளவில் அது 46 சதவீதமான பௌதீக முன்னேற்றத்தைப் பதிவுசெய்திருந்தது. இச்செயற்றிட்டமானது 2019ஆம் ஆண்டின் இறுதியில் நிறைவுசெய்யப்படுமென எதிா்பாா்க்கப்படுகின்றது. 2018 மாச்சு மாதத்தில் உள்நாட்டு நடவடிக்கைகளுக்கு மாத்திரம் மீள்திறக்கப்பட்ட மட்டக்களப்பு உள்நாட்டு விமானநிலையமானது 2019ஆம் ஆண்டின் முதலரைப்பகுதியில் 394 விமானங்களின் அசைவுகளுடன் 1,638 பயணிகளின் அசைவுகளைப் பதிவுசெய்திருந்தது. மாவட்டத்தில் பொருளாதாரத்தை முன்னேற்றுவதற்கான வழிமுறையாகவும் புதிய வருவாய் மூலங்களை உருவாக்குவதற்காகவும் மட்டக்களப்பு உள்நாட்டு விமானநிலையத்தை பன்னாட்டு விமானநிலையமாக அபிவிருத்தி செய்வதற்கு அமைச்சா்களின் அமைச்சரவை ஒப்புதலை வழங்கியிருந்தது. 2019 ஒத்தோபா் மாதத்தில் பலாலி விமானநிலையமானது தரமுயா்த்தப்பட்டதுடன் யாழ்ப்பாண சா்வதேச விமானநிலையமென மீள்பெயரிடப்பட்டது. பிராந்திய விமானநிலையங்களின் அண்மைக்கால அபிவிருத்திகள் மற்றும் பன்னாட்டு விமானநிலையங்களுக்கான அவற்றின் மாற்றங்கள் என்பவற்றுடன் இலங்கையானது கொழும்பு, மத்தள, இரத்மலானை, மட்டக்களப்பு மற்றும் யாழ்ப்பாணம் போன்ற அமைவிடங்களில் ஐந்து பன்னாட்டு விமானநிலையங்களைக் கொண்டிருக்கும்.

### துறைமுகப் பணிகள்

- **2019இன் முதல் ஒன்பது மாதகாலப்பகுதியில் கொழும்பு துறைமுகத்தின் முக்கிய கொள்கலன் முனைக்கோடிகளின் வா்த்தக நடவடிக்கைகளின் விரிவாக்கங்களுடன் துறைமுகத்துடன் தொடா்புடைய நடவடிக்கைகள் மேலும் விரிவாக்கப்பட்டன.** கொழும்புத் துறைமுகமானது முன்னைய ஆண்டின் தொடா்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 5.2 மில்லியன் இருபது அடிக்கு சமமான கொள்கலன் அலகுகளுக்கு எதிராக 2019இன் முதல் ஒன்பது மாதகாலப்பகுதியில் 5.4 மில்லியன் இருபது அடிக்கு சமமான கொள்கலன் அலகுகளை கையாண்டிருந்தது. பாதுகாப்பாக வைத்திருக்கப்படும் கொள்கலன் உள்ளடங்கலாக மாற்றிக்

வரைபடம் 3.4

இலங்கை துறைமுகங்களில் கொள்கலன் கையாளல், மாற்றிக் கப்பலேற்றல் மற்றும் சரக்குக் கையாளல்




*மூலங்கள்:* இலங்கை துறைமுக அதிகாரசபை
இலங்கை மத்திய வங்கி

கப்பலேற்றல் கொள்கலன்களின் கையாளல் எண்ணிக்கை 2019இன் முதல் ஒன்பது மாதங்களில் கொழும்பு துறைமுகத்தின் மொத்த கொள்கலன் எண்ணிக்கையில் 82.6 சதவீதத்திற்கு வகைகூறியிருந்த அதேவேளை 2018இன் அதேகாலப்பகுதியுடன் ஒப்பிடுமிடத்து 6.6 சதவீத வளர்ச்சியைப் பதிவுசெய்திருந்தன. எனினும், ஆய்விற்குரிய காலப்பகுதியில் உள்நாட்டு நோக்கங்களுக்காக கையாளப்பட்ட கொள்கலன்களின் எண்ணிக்கை 7.2 சதவீதமான வீழ்ச்சியை பதிவுசெய்திருந்தன. கொள்கலன், மாற்றிக்கப்பலேற்றல் மற்றும் சரக்குக் கையாளல் என்பவற்றின் நியதிகளில் கொழும்பு துறைமுகத்தின் ஒட்டுமொத்த செயலாற்றமானது 2018இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுமிடத்து 2019இன் முதல் ஒன்பது மாதங்களில் முறையே 3.9 சதவீதம், 5.5 சதவீதம் மற்றும் 3.2 சதவீதம் வளர்ச்சியைப் பதிவுசெய்திருந்தது. கொழும்பு பன்னாட்டு கொள்கலன் முனைக்கோடியில் மேற்கொள்ளப்பட்ட மொத்த கொள்கலன் கையாளல் 2019இன் முதல் ஒன்பது மாதகாலப்பகுதியில் 8.2 சதவீத வளர்ச்சியைப் பதிவுசெய்திருந்த அதேவேளை தெற்காசிய கேட்வேய் முனைக்கோடி 0.5 சதவீதமான சிறிதளவான வீழ்ச்சியைப் பதிவுசெய்திருந்தது. அதன்படி, ஆய்விற்குரிய காலப்பகுதியில் கொழும்பு பன்னாட்டு கொள்கலன் முனைக்கோடி மற்றும் தெற்காசிய கேட்வேய் முனைக்கோடி என்பவற்றிலான மொத்த கொள்கலன் கையாளலானது முறையே 2.1 மில்லியன் மற்றும் 1.5 மில்லியன் இருபது அடிக்கு சமனான கொள்கலன் அலகுகளைப் பதிவுசெய்திருந்தது. அதேவேளை, ஜெயா கொள்கலன் முனைக்கோடி உள்ளடங்கலாக இலங்கை துறைமுக அதிகாரசபையால் செயற்படுத்தப்படுகின்ற கொள்கலன் முனைக்கோடிகள் 2019இன் முதல் ஒன்பது மாதகாலப்பகுதியில் 1.8 மில்லியன் இருபது அடிப்பு சமனான அலகுகளுக்கு 3.0 சதவீத வளர்ச்சியைப் பதிவுசெய்திருந்தது. 2019இன் முதல் ஒன்பது மாத காலப்பகுதியில் கொழும்பு துறைமுகத்தின் மொத்த கொள்கலன் கையாளல் கொழும்பு பன்னாட்டு கொள்கலன் முனைக்கோடி, இலங்கை துறைமுக அதிகாரசபை மற்றும் தெற்காசிய கேட்வேய் முனைக்கோடி என்பன முறையே 39.3 சதவீதம், 32.3 சதவீதம் மற்றும் 28.4 சதவீதத்திற்கு வகைகூறியிருந்தது. அதேவேளை, ஆய்விற்குரிய காலப்பகுதியில் கொழும்பு பன்னாட்டு கொள்கலன் முனைக்கோடி, மற்றும் இலங்கை துறைமுக அதிகாரசபை என்பவற்றின் மாற்றிக்கப்பலேற்றல் கொள்கலன் கையாளல் முறையே 13.3 சதவீதம் மற்றும் 6.4 சதவீதமான அதிகரிப்பைக் பதிவுசெய்திருந்தது. எனினும் தெற்காசிய கேட்வேய் முனைக்கோடியில் மேற்கொள்ளப்பட்ட மாற்றிக் கப்பலேற்றல் கையாளலானது முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 4.7 சதவீதமான சுருக்கத்தைப் பதிவுசெய்திருந்தது.

- **2019இன் முதல் ஒன்பது மாதங்களில் சரக்குக் கையாளல் மற்றும் வாகனங்களின் கையாளல் என்பவற்றின் நியதிகளில் அம்பாந்தோட்டை துறைமுகமானது கணிசமான வளர்ச்சியைப் பதிவுசெய்திருந்தது.** 2019இன் முதல் ஒன்பது மாதகாலப்பகுதியில் அம்பாந்தோட்டை துறைமுகத்தில் மேற்கொள்ளப்பட்ட மொத்த சரக்குக் கையாளலானது 2018இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 351,202 மெற்றிக்தொன்களுக்கெதிராக 797,672 மெற்றிக்தொன்களுக்கு 127.1 சதவீதமான வளர்ச்சியைப் பதிவுசெய்திருந்தது. அதேவேளை, அம்பாந்தோட்டை துறைமுகத்தால் கையாளப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை 2019இன் முதல் ஒன்பது மாதகாலப்பகுதியில் 254,722 இற்கு 146.4 சதவீதமான விரிவாக்கத்தைப் பதிவுசெய்த மாற்றிக்கப்பலேற்றல் வாகனங்களின் கையாளலின் பிரதான துணையினால் 281,072 இற்கு 61.4 சதவீதமான வளர்ச்சியைப் பதிவுசெய்திருந்தது. 2019இன் முதல் ஒன்பது மாதகாலப்பகுதியில் அம்பாந்தோட்டை துறைமுகத்தில் உள்நாட்டு காரணங்களுக்காக கையாளப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை முன்னைய ஆண்டின் அதேகாலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 70,782 வாகனங்களிலிருந்து 26,350 வாகனங்களுக்கு 62.8 சதவீதமான கணிசமானளவான வீழ்ச்சியைப் பதிவுசெய்திருந்தது. வாகனங்களின் கையாளலில் ஏற்பட்ட வீழ்ச்சியானது 2018ஆம் ஆண்டில் அரசாங்கம் மற்றும் மத்திய வங்கி ஆகிய இரண்டினாலும் மோட்டார் வாகனங்களின் இறக்குமதியைக் கட்டுப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட கொள்கை வழிமுறைகளின் பிரதான காரணத்தால் ஏற்பட்டிருந்தன.

- **அரசாங்கம் மற்றும் துறைமுகத்துடன் தொடர்புடைய நிறுவனங்கள் நாட்டின் பிரதான துறைமுகங்களில் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்திருந்த அதேவேளை கடல்வழி போக்குவரத்தின் ஊடான தொடர்புத்தன்மையை முன்னேற்றுவதற்கு பல்வேறுபட்ட வழிமுறைகளை தொடர்ச்சியாக மேற்கொண்டிருந்தது.** 2019இன் முதலரைப்பகுதியில் கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு கொள்கலனின் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடரப்பட்டதுடன் அரச-தனியார் பங்குடமையின் கீழ் கிழக்கு கொள்கலன் முனைக்கோட்டின் நடவடிக்கைகள் 2020

அட்டவணை 3.5

கப்பற் பணிகளின் செயலாற்றம்

| விடயம் | 2018 சன-செத் | 2019 சன-செத்(அ) | மாற்றம் % |
|---|---|---|---|
| இலங்கை துறைமுகத்திற்கு வருகைதந்த கப்பல்கள் | 3,717 | 3,501 | -5.8 |
| கையாளப்பட்ட மொத்தச் சரக்கு (மெ.தொ '000 ) | 77,949 | 80,462 | 3.2 |
| கையாளப்பட்ட மொத்தக் கொள்கலன்கள் (இ.ச.அ. '000) (ஆ) | 5,223 | 5,428 | 3.9 |
| மாற்றிக் கப்பலேற்றல் (இ.ச.அ '000) (ஆ) | 4,140 | 4,366 | 5.5 |

*மூலம்:* இலங்கை துறைமுக அதிகாரசபை

(அ) தற்காலிகமானது

(ஆ) இ.ச.அ. - இருபது அடிக்குச் சமனான கொள்கலன் அலகுகள்

இல் ஆரம்பிக்கப்படுமென அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது. இலங்கைத் துறைமுக அதிகாரசபை 440 மீற்றர் நீளம் கொண்ட துறைமுகத்திற்கான மேடைச்சுவர், அருகிலுள்ள புறம்பகுதி மற்றும் தொடர்புடைய வசதிகள் என்பவற்றை அபிவிருத்தி செய்திருக்கின்றது. திருகோணமலை துறைமுகத்தில் ஊடுருவல் வசதிகளை மேம்படுத்தும் நோக்கில் யப்பான் சர்வதேச நிறுவன அமைப்பின் ஒத்துழைப்புடன் துறைமுக அதிகாரசபையின் இரவிற்கான ஊடுருவல் முன்னேற்றச் செயற்றிட்டம் 2019இன் முதலரைப்பகுதியில் தொடர்ந்திருந்தது. இச்செயற்றிட்டம் 2019 திசெம்பர் மாதத்தில் நிறைவு செய்யப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. அதேவேளை, கொழும்பு மற்றும் திருகோணமலைத் துறைமுகங்களை அபிவிருத்தி செய்வதற்கான திட்டங்களை உள்ளடக்கியுள்ள தேசிய துறைமுக பெரும்பாகத் திட்டமொன்று சர்வதேச ஆலோசகர்களின் தொழில்நுட்ப உதவியுடன் தயாரிக்கப்படுகின்றது.


## தொடர்பூட்டல் பணிகள்

- **2019இன் முதலரைப் பகுதியின் போது தொலைத்தெடர்பூட்டல் தொழிற்துறையானது ஆரோக்கியமானதொரு செயலாற்றத்தைக் காட்டியிருந்தது.** 2018 யூன் இறுதியிலுள்ளவாறான மொத்தத் தொலைபேசி இணைப்புக்களுடன் ஒப்பிடுகையில் 2019 யூன் இறுதியளவில் 35.1 மில்லியனுக்கு 7.1 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. செல்லிடத் தொலைபேசி இணைப்புக்கள் மற்றும் நிலையாகப் பொருத்தப்பட்ட கம்பிவழி தொலைபேசி இணைப்புக்கள் முறையே 8.3 சதவீதம் மற்றும் 2.4 சதவீதத்தால் அதிகரித்திருந்தவேளையில் நிலையான கம்பியல்லாத் தொலைபேசி இணைப்புக்கள் தொடர்பில் பல ஆண்டுகளாக அவதானிக்கப்பட்டு வந்த குறைவடையும் போக்கானது 2019இன் முதலரைப்பகுதியின் போதும் தொடர்ந்ததுடன் 2018 யூன் மாதத்தின் இறுதியில் காணப்பட்ட கம்பியல்லா நிலையான தொலைபேசி இணைப்புக்களுடன் ஒப்பிடுகையில் 15.4 சதவீதக் குறைவொன்றைப் பதிவுசெய்திருந்தது. மேலும், 2019 யூன் இறுதியில் நிலையான இணைய இணைப்புக்கள் 14.6 சதவீதத்தால் அதிகரித்த வேளையில் நிலையான தொலைபேசி நுழைவு (100 ஆட்களுக்கான இணைப்புக்கள்) மற்றும் செல்லிடத் தொலைபேசி நுழைவு (100 ஆட்களுக்கான இணைப்புக்கள்) முறையே 10.8 மற்றும் 150.1 ஆகக் காணப்பட்டது. 2018இன் இறுதியளவில் செல்லிட இணைய இணைப்புக்கள் 5.7 மில்லியனாகவும் இணைய நுழைவு (100 ஆட்களுக்கு இணைப்புக்கள்) 33.5 ஆகவும் காணப்பட்டது. இலங்கைத் தொலைத் தொடர்பூட்டல் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவானது செல்லிட அகல அலைவரிசைத் தரவுகளைத் திருத்தியமைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது. இதன் காரணமாக, 2019இன் முதலரைக் காலப்பகுதிக்கான செல்லிட அகல அலைவரிசை குறித்த தரவுகள் தற்போது கிடைக்கப்பெறவில்லை.

- **இலங்கைத் தொலைத்தொடர்பூட்டல் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு மற்றும் தகவல் தொழில்நுட்ப முகவராண்மை என்பன தொலைத்தொடர்பூட்டல் துறையின் வளர்ச்சிக்கு ஆதரவாக பல அபிவிருத்திச் செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தியிருந்தன.** கொழும்புத் தாமரைக் கோபுரம் 2019 செத்தெம்பரில் திறந்து வைக்கப்பட்ட அதேவேளை, பொது - தனியார் கூட்டு அடிப்படையில் ஓர் தொலைத்தொடர்பு ஊடக நிலையத்தை (அம்பாந்தோட்டை தகவல் பூங்கா) அபிவிருத்தி செய்வதற்கான சாத்தியக்கூறுகளை இலங்கைத் தொலைத்தொடர்பூட்டல் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு ஆராய்ந்து வருகின்றது. அதேவேளை, தகவல் தொழில்நுட்ப முகவராண்மை 'பொருளாதாரத்தை டிஜிட்டல் மயமாக்கல்' கொள்கையின் கீழ் நாட்டின் உட்கட்டமைப்பை அபிவிருத்தி செய்யும் நோக்கில் பல்வேறு திட்டங்களில்

வரைபடம் 3.5

தொலைபேசி இணைப்புக்கள்
(பொருத்தப்பட்ட மற்றும் கையடக்கத் தொலைபேசி மற்றும் இணைய இணைப்புக்கள் (எண்ணிக்கை)




*மூலங்கள்:* இலங்கை தொலைத்தொடர்பூட்டல் ஒழுங்கமைப்பு ஆணைக்குழு
இலங்கை மத்திய வங்கி

அட்டவணை 3.6

தொலைத்தொடர்பூட்டல் பணிகள்

| வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை | 2018 யூன் இறுதியில் | 2019 யூன் இறுதியில்(அ) | மாற்றம் % |
|---|---|---|---|
| பொருத்தப்பட்ட தொலைபேசிகள் ('000) | 2,531 | 2,355 | -6.9 |
| செல்லிடத் தொலைபேசிகள் ('000) | 30,209 | 32,723 | 8.3 |
| இணையத்தள இணைப்புக்கள் ('000) | 1,332 | 1,528 | 14.6 |
| மொத்தத் தொலைபேசி அடர்த்தி(ஆ) | 151.1 | 160.9 | 6.5 |
| செல்லிடத் தொலைபேசி அடர்த்தி(ஆ) | 139.4 | 150.1 | 7.7 |

*மூலங்கள்:* இலங்கை தொலைத்தொடர்பூட்டல் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு
தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

(அ) தற்காலிகமானது
(ஆ) 100 நபர்களுக்கான தொலைபேசிகள்

ஈடுபட்டுள்ளது. 2019இன் முதலரைப் பகுதியின் போது, அரச அமைவிடங்களிற்கு அதிக வேகத்திலான பரந்த பரப்பு வலையமைப்பு இணைப்பை வழங்குவதற்காக முன்னெடுக்கப்பட்ட இலங்கை அரசாங்க வலையமைப்பு 2.0 செயற்றிட்டம் மற்றும் தரவு முகாமைத்துவத்திற்கான தேசிய அடித்தளமாக விளங்கும் இலங்கை அரசாங்க கிளவுட் 2.0 செயற்றிட்டம் என்பன முன்னேற்றமாகக் காணப்பட்டன. இலங்கை அரசாங்க வலையமைப்பு 2.0 மற்றும் இலங்கை அரசாங்க கிளவுட் 2.0 செயற்றிட்டங்கள் முறையே 2022 மற்றும் 2019இல் நிறைவுசெய்யப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றன. மேலும், அரச அலுவலர்களுக்கான தகவல் தொடர்பூட்டல் தொழில்நுட்ப விழிப்புணர்வை மேம்படுத்தும் வகையில் தகவல் தொடர்பூட்டல் தொழில்நுட்பத்தில் திறன் வளர்த்தல் முயற்சிகள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் என்பன தகவல் தொழில்நுட்ப முகவராண்மையால் நடாத்தப்பட்டன. அதேவேளை, டிஜிட்டல் உட்கட்டமைப்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சு இலங்கையை டிஜிட்டல் வலுப்படுத்தப்பட்ட நாடாக அபிவிருத்தி செய்வதற்காக டிஜிட்டல் கல்வியறிவு மற்றும் சைபர் பாதுகாப்புத் தொடர்பான ஆராய்ச்சி மற்றும் ஆய்வுகள் உள்ளடங்கலாக பல செயற்றிட்டங்களைத் தொடர்ந்தும் முன்னெடுத்திருந்தது. மேலும், நிலைபேறான டிஜிட்டல் பொருளாதார வளர்ச்சியை உறுதிப்படுத்துவதற்காக தேசிய டிஜிட்டல் கொள்கையொன்றை (2020-2025இற்கான இலங்கையின் டிஜிட்டல் நிகழ்ச்சித்திட்டம்) நடைமுறைப்படுத்துவதற்கான முயற்சிகளை டிஜிட்டல் உட்கட்டமைப்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சு முன்னெடுத்திருந்தது.

## சமூக உட்கட்டமைப்பு அபிவிருத்திகள்

### சுகாதாரம்

- **2019இன் முதலரைப்பகுதியின் போது, நாட்டின் சுகாதாரத் துறையில் காணப்படக்கூடிய பௌதிக உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் முயற்சிகளை அரசாங்கம் தொடர்ந்தும் முன்னெடுத்திருந்தது.** அம்பாந்தோட்டையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட அதி நவீனத்துவம் வாய்ந்த மாவட்ட வைத்தியசாலை 2019 யூலை மாதத்தில் திறந்து வைக்கப்பட்டது. அதேவேளை, ஆண்டின் முதலரைப் பகுதியில் பொலன்னறுவையிலுள்ள சிறுவர் மனநலப் பிரிவு மற்றும் மினுவாங்கொடை மாவட்ட வைத்தியசாலையில் போதைப்பொருள் புனர்வாழ்வு நிலையம் என்பவற்றின் நிர்மாணப் பணிகள் செயற்பாட்டிலிருந்தன. அதேவேளை, 2019 யூன் மாதத்தின் இறுதியளவில் அரச வைத்தியசாலைகளில் 21,298 தகைமை பெற்ற வைத்தியர்களும் 36,798 தாதிகளும் காணப்பட்டனர். இது, 1,119 நபர்களுக்கு ஒரு வைத்தியரினையும் 648 நபர்களுக்கு ஒரு தாதியினையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. அரச வைத்தியசாலைகளில் மொத்தமாக 76,824 படுக்கைகள் காணப்பட்டதுடன் இது 1,000 நபர்களுக்கு 3.2 படுக்கைகளை எடுத்துக்காட்டுகின்றது. 2019இன் முதலரைப்பகுதியின் இறுதியளவில் 4,913 படுக்கைக் கொள்ளளவுடனும் 25,714 பதிவுசெய்யப்பட்ட ஆயுர்வேத வைத்தியர்களுடனும் 114 அரசாங்க ஆயுர்வேத வைத்தியசாலைகள் காணப்பட்டன.

- **தீவிரமான தொற்று நோய்களைக் கட்டுப்படுத்தும் வகையில் இலங்கை குறிப்பிடத்தக்களவான சாதனைகளை அடைந்திருந்தாலும் டெங்கு, இன்புளுவென்சா மற்றும் லெப்டோஸ்பிரோசிஸ் போன்று பொதுவாக ஏற்படும் தொற்றுக்களை கட்டுப்படுத்துவதற்கும் ஏற்கனவே கட்டுப்படுத்தப்பட்ட பரவும் நோய்களின் மீள்பரவுதலைத் தடுப்பதற்கும் தொடர்ச்சியான முயற்சிகள் தேவைப்படுகின்றன.** மூன்று ஆண்டுகளாக உள்நாட்டு வைரஸ் பரவுதலை தடைசெய்ய முடிந்தமையினால் உலக சுகாதாரத் தாபனத்தால் இலங்கை தட்டம்மை இல்லாத ஓர் நாடாக அறிவிக்கப்பட்டது. 2016இல், இலங்கை மலேரியா மற்றும் யானைக்கால் நோய் இல்லாத நாடாக அறிவிக்கப்பட்டபோது 2018இல் நாடானது ருபெல்லா கட்டுப்படுத்தப்பட்ட நிலையைப் பெற்றுக்கொண்டது. இச்சாதனைகள் நாட்டின் திடமான நோய்த்தடுப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் நோய்க்காவிக் கட்டுப்பாடு, கண்காணிப்பு மற்றும் நோய் முகாமைத்துவ நடவடிக்கைகள் போன்றவற்றை பல தசாப்தங்களாக மேற்கொள்ளப்பட்டதன் பெறுபேறுகளாகும். எவ்வாறாயினும், இவ்வைரஸ்கள் அடுத்துள்ள மற்றும் தொலைவிலுள்ள நாடுகளிலிருந்து, குறிப்பாக இலங்கையுடன் நுழைவிடங்களில் குறைந்தளவு கண்காணிப்பு பின்னணியில் குறிப்பிடத்தக்க மக்கள் நடமாட்டமுடைய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் அபாயமானது தொடர்ந்து காணப்படக்கூடும். 2019 ஒத்தோபர் நடுப்பகுதியிலுள்ளவாறு, ஏறத்தாள 35 இறக்குமதி செய்யப்பட்ட மலேரியா நோயாளர்கள் காணப்பட்டதுடன் இது நாட்டினுள் மலேரியா நோய் மீள்பரவக்கூடியதற்கானதொரு அபாயத்தைச் சுட்டிக்காட்டுகின்றது. டெங்கு, யானைக்கால் மற்றும் இன்புளுவென்சா தொற்றுக்களின் மீண்டெழுகையானது 2019இன் முதலரையாண்டின் போது அவதானிக்கப்பட்டது. முன்னைய வருடத்தின் முதலரைப் பகுதியின் டெங்கு பரவுகை 100,000 பேருக்கு 123.9 நபர்கள் மற்றும் இறப்பு வீதம் 0.12 சதவீதம் என்பவற்றுடன் ஒப்பிடுகையில் இவ்வருட முதலரைப்பகுதியின் போது 0.15 சதவீத இறப்பு வீதத்துடன் டெங்கு பரவுகையானது 100,000 பேருக்கு 120.5 நபர்களாகக் காணப்பட்டது. அதேவேளை, 2019இன் முதலரையாண்டின்போது இன்புளுவென்சா மற்றும் யானைக்கால் நோய்களுடன் தொடர்புடைய மரணங்கள் முறையே 25 மற்றும் 48ஆகப் பதிவுசெய்யப்பட்டிருந்தன.

- **2019இன் முதலரையாண்டின் போது தனியார் சுகாதார நிறுவனங்கள் சுகாதாரத் துறைக்குள் தொடர்ந்தும் முக்கிய பங்காற்றியிருந்தன.** 2019 யூன் இறுதியளவில் 5,217

படுக்கைகளுடன் கூடிய 200 பதிவு செய்யப்பட்ட தனியார் வைத்தியசாலைகள் காணப்பட்டன. மேலும், 2019 யூலை இறுதியளவில் 170 முழுநேர பொது மருத்துவ நிலையங்கள்/ மருந்தகங்கள்/மருத்துவ மையங்கள், 265 மருத்துவ ஆய்வுகூடங்கள், 129 மருத்துவ நிலையங்கள்/ பரிசோதனை நிலையங்கள்/ பகல்நேர பராமரிப்பு மருத்துவ நிலையங்கள்/ ஆலோசனை நிலையங்கள் மற்றும் 337 பகுதிநேர பொது மருத்துவ நிலையங்கள்/ மருந்தகங்கள்/ மருத்துவமையங்கள் என்பன பதிவுசெய்யப்பட்டிருந்தன. நோய் வடிவங்கள் மற்றும் அதிகரிக்கும் வருமான மட்டம் என்பவற்றுடன் மக்கள் தனியார் மருத்துவப் பணிகளில் தங்கியிருக்கும் தன்மை உயர்வடைகின்றது. இது குறிப்பாக இறுக்கமான இறை இடைவெளியொன்றின் பின்னனியில் சுகாதாரத் துறைக்கான அரச செலவினத்தை மட்டுப்படுத்துவதனால் ஏற்படுகின்றது. எனவே, தனியார் துறையினரால் வழங்கப்படும் சுகாதாரப் பணிகளின் தரம் மற்றும் தாங்குமியல்பை உறுதிப்படுத்துவதற்காக தனியார் சுகாதாரத் துறையினரின் ஒழுங்குமுறைப்படுத்தலை வலுப்படுத்தல் அவசியமானதாகும்.

3

### கல்வி

- **இலங்கையின் பொதுக் கல்வியில் காணப்படுகின்ற சமத்துவம், தரம் மற்றும் வினைத்திறன் என்பவற்றுடன் தொடர்புடைய பிரச்சனைகளை தீர்ப்பதனூடாக நாட்டின் மனித மூலதனத்தை அபிவிருத்தி செய்யும் நோக்கில் கல்வியமைச்சு அனைத்து மாகாண கல்வி அதிகாரிகள் மற்றும் கல்வி அதிகாரிகள் மற்றும் தேசிய மட்ட நிறுவனங்கள் என்பனவற்றின் ஒத்துழைப்புடன் 2020-2025 காலப்பகுதிக்கான நடுத்தரகால உபாய திட்டமொன்றை அபிவிருத்திசெய்துள்ளது.** உபாயத்திட்டமானது அனைத்து பிள்ளைகளுக்கும் சமத்துவமான கற்கைச் சந்தர்ப்பங்களைப் பலப்படுத்துதல், பொதுக்கல்வியின் தரத்தை முன்னேற்றல், பொதுக்கல்வியின் வாரிசுகள் மற்றும் பணி வழங்கல்களை பலப்படுத்தல், சான்றுகளை அடிப்படையாகக் கொண்ட கல்விக் கொள்கையின் உருவாக்கம் மற்றும் திட்டமிடல்களை மேம்படுத்தல் போன்ற நான்கு முக்கிய விடயப்பரப்புக்களின் கீழ் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. அதேவேளை, 13 ஆண்டுகள் உத்தரவாதப்பட்ட கல்வி நிகழ்ச்சித்திட்டத்தின் கட்டம் 1இன் கீழ் 104 மத்திய நிலையங்களில் 1,545 மாணவர்கள் தொழில்சார் பயிற்சிகளில் தற்போது ஈடுபட்டுள்ளனர். மேலும், யூலை மாதத்தில் ஆரம்பிக்கப்பட்ட தொழில்சார் பயிற்சி நிகழ்சித்திட்டத்தின் கட்டம் 2 இன் கீழ் 2019 யூன் மாதத்தின் இறுதியளவில் பாடசாலைகளில் தொழில்சார் கற்கைகளின் இடைநிலை கற்கை அலகுகளை 6,341 மாணவர்கள் தொடர்ந்திருந்தனர். மேலும், புதிதாக நியமிக்கப்பட்ட 1,010 ஆசிரியர்களுள் 76 ஆசிரியர்கள் 2019 காலப்பகுதியில் நியமிக்கப்பட்டதுடன் பாடசாலைகளில் தொழில்சார் கற்கைகள் பாடத்திட்டங்களைத் தற்போது வழங்கி வருகின்றனர். மேலும், 13 வருடங்கள் உத்தரவாதப்படுத்தப்பட்ட கல்வி நிகழ்ச்சித்திட்டத்தின் கட்டம் 1 உடன் தொடர்புடைய கட்டுமான நடவடிக்கைகள் நிறைவுசெய்யப்பட்டுள்ள அதேவேளை கட்டம் II இன் கீழ் 154 பாடசாலைகளில் 141 பாடசாலைகளின் கட்டுமான வேலைகள் நிறைவு செய்யப்பட்டுக் கொண்டு வருகின்றன. 5 தொடக்கம் 14 வருடங்கள் வரையான வயது குழுவுக்குள்ளவர்களிடையேயான ஒட்டுமொத்த மாணவர்களின் தேறிய உள்ளீர்ப்பு விகிதமானது 2019இன் யூன் இறுதியளவில் 95.3 சதவீதமாக காணப்பட்ட அதேவேளை ஆண் மற்றும் பெண் மாணவர்களுக்கிடையேயான தேறிய உள்ளீர்ப்பு விகிதமானது முறையே 95.8 சதவீதம் மற்றும் 94.8 சதவீதமாகக் காணப்பட்டது.

- **தேசியற் கல்வியியற் கல்லூரிகள், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள், தேசிய வாசிகசாலை, 'பிரிவென' பாடசாலை அபிவிருத்தி மற்றும் ஸ்மார்ட் வகுப்பறைகளை நிறுவுதல் போன்றவற்றின் உட்கட்டமைப்பு அபிவிருத்திகளுக்கு சிறப்புக் கவனிப்புக்களை வழங்குவதனூடாக 'அண்மையிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை' என்ற நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பொதுக்கல்வித் துறையின் பௌதீக உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்ந்தும் அபிவிருத்தி செய்யப்பட்டன.** அதன்படி அனைத்து ஒன்பது மாகாணங்களையும் உள்ளடக்கி 'அண்மையிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை' என்ற நிகழ்ச்சித் திட்டமானது 8,782 மாகாணப் பாடசாலைகள் மற்றும் 282 தேசிய பாடசாலைகளில் அமுல்படுத்தப்பட்டன.

- **பொதுக் கல்வித்துறையிலுள்ள தனியார் நிறுவனங்களைக் கண்காணித்தல் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் என்பன அரசாங்கத்திற்கு சவாலானதொன்றாக காணப்படுகின்றது.** நாட்டில் தனியார் கல்விக்கு காணப்படுகின்ற அதிகரித்த கேள்வியைக் கருத்திற்கொண்டு 2018 ஏப்பிறல் மாதத்தில் அமைச்சர்களின் அமைச்சரவை தெரிவுசெய்யப்பட்ட அரசாங்கத்தால் ஒப்புதலளிக்கப்பட்ட தனியார் பாடசாலைகள் ஒவ்வொன்றும் ஐந்து கிளைகளைத் திறப்பதற்கு அனுமதியை வழங்கியுள்ளது. அதன்படி, அரசாங்கத்தால் ஒப்புதலளிக்கப்பட்ட தனியார் பாடசாலைகளின் ஒன்பது கிளைகள் ஏற்கனவே நிறுவப்பட்டுள்ளன. அரசாங்கத்தால் ஒப்புதலளிக்கப்பட்ட தாய் பாடசாலைகளின் கீழ் நிறுவப்பட்ட அனைத்து தனியார் பாடசாலைகள் மற்றும் கிளைப் பாடசாலைகள் என்பன கல்வியமைச்சு, மாகாணக் கல்வித் திணைக்களங்கள்/ வலயக் கல்விக் காரியாலயம் என்பவற்றால் கண்காணிக்கப்பட்டு வருகின்றன. எனினும், சர்வதேச பாடசாலைகள் இன்னமும் கல்வியமைச்சின் மேற்பார்வையின் கீழ் கொண்டுவரப்படவில்லை.

- **உயர் கல்வியமைச்சு உயர் கல்வி முறைமையை முன்னேற்றுவதற்கான அதனது முயற்சிகளைத்**

**தொடர்ந்திருந்த அதேவேளை அரச மற்றும் தனியார் துறை பல்கலைக்கழகங்கள் நிறுவுவதற்கும் தரநியமங்களை நிச்சயப்படுத்திக் கொள்வதற்கும் வசதியளித்திருந்தது.** அதேவேளை, 2018/19 கல்வியாண்டுக்கென சாதாரண உட்சேர்ப்பின் கீழ் பல்கலைக்கழக அனுமதிக்காக 30,830 மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டனர். மேலும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் 2018/19 கல்வியாண்டிற்கான இரண்டு புதிய இளமானிப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. மேலும், 2019இன் முதலரைப்பகுதியில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் நான்கு பீடங்கள், 31 திணைக்களங்கள் மற்றும் 14 பட்டமேற்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் ஒப்புதலளிக்கப்பட்டிருந்தன.

- **அரசாங்கத்துடன் இணைந்து தனியார் துறையும் மூன்றாம் நிலைக் கல்வியை வழங்கும் நடவடிக்கைகளில் தொடர்ந்தும் ஈடுபட்டிருந்தது.** 2019 யூன் இறுதியில், 17 அரசசாரா உயர்கல்வி நிறுவனங்கள் பட்டங்களை வழங்குகின்ற நிறுவனங்களாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளதுடன் இவை உள்நாட்டில் அங்கீகரிக்கப்பட்ட 142 பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டங்களை வழங்குகின்றன. 2019இன் முதலரைப்பகுதியில் அரசசாரா உயர்கல்வி நிறுவனங்களால் வழங்கப்பட்ட 20 புதிய பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் நிறுவன ரீதியான மீளாய்வுகள் தொடர்ந்தும் செயன்முறைப்படுத்தப்படுகின்றன. உயர் கல்வியமைச்சானது 'தர உத்தரவாதம் மற்றும் அங்கீகார ஆணைக்குழு' ஒன்றினை நிறுவுவதற்கான சட்டரீதியான கட்டமைப்பொன்றை உருவாக்கும் நோக்கில் வரைவொன்றினை உருவாக்கியதுடன் அமைச்சர்களில் அமைச்சரவையின் ஒப்புதலினைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் வர்த்தமானியில் வெளியிடப்பட்டது. மேலும், ஆர்வலர்களினால் அடையாளப்படுத்தப்பட்ட பல்வேறு காரணிகளைக் கருத்திற்கொண்டு கல்வி நிறுவனமொன்றை 'பட்டம் வழங்கும் நிறுவனம்' என அங்கீகரிப்பதற்கு மீளாய்வு செயன்முறையின் போது கருத்திற் கொள்ளப்பட வேண்டிய 'குறைந்தபட்ச நியமங்களின்' தொகுப்பொன்றை அமைச்சானது தொடர்ச்சியாக அபிவிருத்தி செய்துவந்துள்ளது.

- **தொழில்நுட்ப மற்றும் தொழில்சார் கல்வி மற்றும் பயிற்சித் துறையானது ஊழியச் சந்தையின் தேவைப்பாடுகளுக்கு ஏற்ற வகையில் இளைஞர்களின் திறன்களை முன்னேற்றுவதற்கு அதனது நடவடிக்கைகளைத் தொடர்ந்திருந்தது.** 2019 யூன் மாதத்தின் இறுதியில் தொழில்நுட்ப மற்றும் தொழில்சார் கல்வி மற்றும் பயிற்சித்துறையில் 1,316 பதிவுசெய்யப்பட்ட நிறுவனங்கள் காணப்பட்டதுடன் இது 578 பொதுத்துறை நிறுவனங்களையும் 738 தனியார் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களையும் உள்ளடக்குகின்றது. இந்நிறுவனங்கள் 2019இன் முதலரைப் பகுதியில் 2,464 அங்கீகாரமளிக்கப்பட்ட தொழில்நுட்ப மற்றும் தொழில்சார் கல்வி மற்றும் பயிற்சி கற்கைநெறிகளை வழங்கியிருந்த அதேவேளை 38,290 தேசிய தொழில்சார் கல்விச் சான்றிதழ்களை வெளியிட்டிருந்தது. இக்காலப்பகுதியில் தேசிய தேர்ச்சி நியமங்கள் மற்றும் பாடத்திட்டங்கள் அபிவிருத்தி செய்யபட்டிருந்ததுடன் 12 தொழில்களுக்கு மூன்றாம்நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழு ஒப்புதலை வழங்கியிருந்தது. மேலும், தொழில்நுட்ப மற்றும் தொழில்சார் கல்வி மற்றும் பயிற்சி துறையின் அபிவிருத்திக்காக தன்னார்வ நிபுணர்களின் தரவுத்தளமொன்றும் குழுவொன்றும் நிறுவப்பட்டன. ஊழியச் சந்தையின் தேவைப்பாட்டைப் பூர்த்தி செய்யும் நோக்கில் தொழில்நுட்ப மற்றும் தொழில்சார் கல்வி மற்றும் பயிற்சித் துறையின் தரம் மற்றும் பொருத்தப்பாட்டை மேம்படுத்துவதற்காக அரசாங்கமானது அர்பணிப்பை மேற்கொண்டிருந்தது.

3

## வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி

- **பெருநகர் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு நகர அபிவிருத்தி அதிகாரசபையின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்பட்ட நகர அபிவிருத்தி செயற்றிட்டங்கள் 2019இன் முதலரைப் பகுதியில் முன்னேற்றமடைந்திருந்தன.** நகரவாசிகளின் வசதியை மேம்படுத்துதல் மற்றும் நகரப் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்தல் என்பவற்றை நோக்காகக் கொண்டு நகர அபிவிருத்தி அதிகாரசபையின் குடியிருப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் (சுக்கித்த புறவர) மற்றும் சிறிய குடியிருப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் (மினி சுக்கித்த புறவர) என்பவனற்றின் கீழ், 2019 யூன் இறுதியில் உள்ளவாறாக 1,171 செயற்றிட்டங்கள் செயற்பாட்டிலிருந்ததுடன் 42 செயற்றிட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. அதேவேளை, நகர அபிவிருத்தி அதிகாரசபை கொழும்பு மற்றும் அதன் புறநகர்ப் பகுதிகளிலுள்ள குறைந்த வசதிகளுடைய குடியிருப்புக்களை மீளக் குடியேற்றும் நோக்குடன், 60,000 வீட்டலகுகளை நிர்மாணிப்பதற்கான அதன் நகர மீளமைப்பு நிகழ்ச்சித் திட்டத்தை தொடர்ந்தும் முன்னெடுத்திருந்தது. அதற்கேற்ப, 2019இன் முதலரைப்பகுதியில் மாளிகாவத்தை, ப்ளூமென்டல் வீதி மற்றும் டொரிங்டன் அவனியூ போன்ற செயற்றிட்டங்கள் உள்ளடங்கலாக பல்வேறுபட்ட வீடமைப்புச் செயற்றிட்டங்கள் கொழும்பு நகருக்குள் நடைபெற்றிருந்தன.

- **2019இன் முதலரைப்பகுதியில், பெருநகர் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு நகர உட்கட்டமைப்பு அபிவிருத்தியை மேம்படுத்துவதற்கு பல்வேறுபட்ட செயற்றிட்டங்களில் ஈடுபட்டிருந்தது.** களனிப் பகுதியில் கழிவுப் பொருட்களை ஏற்றும் நிலையத்துடன் கூடிய சுகாதார காணிநிரப்பு நிலையத்தை புத்தளம் மாவட்டத்தில் அருவக்காளு பிரதேசத்தில் நிர்மாணிப்பதன் மூலம் மெட்ரோ

கொழும்பு பிராந்தியம் மற்றும் வடக்கு - மேற்கு மாகாணம் என்பவற்றிலிருந்து உருவாக்கப்படும் திண்மக் கழிவுகளை அகற்றுவதற்கான பொருளாதார ரீதியில் சாத்தியமான மற்றும் நிலைபேறான தீர்வை வழங்கும் நோக்குடன் மெட்ரோ கொழும்புத் திண்மக் கழிவு முகாமைத்துவ செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. நாளொன்றிற்கு 600 மெற்றிக் தொன் குப்பைகளை அப்புறப்படுத்துவதற்காக இச்சுகாதாரக் காணி நிரப்பு பிரதேசம் உருவாக்கப்பட்டுள்ளது. இருப்பினும், காணி நிரப்பலிற்கு எதிராக சுற்றுச்சூழலில் நடைபெற்ற போராட்டங்கள் காரணமாக 2019 காலப்பகுதியில் இந்தக் காணி நிரப்பல் பிரதேசத்தில் கழிவுகளை அப்புறப்படுத்தலானது பல தடவைகள் தடைப்பட்டது. மேலும், காணி நிரப்பல் பிரதேசத்திற்கு திண்மக் கழிவுகளை டிரக்குகள் மூலம் கொண்டு செல்வது இலாபகரமானதல்ல. எனவே, புகையிரதம் மூலம் குப்பைகளை கொண்டு செல்வதற்கான பொறிமுறையொன்றை உருவாக்குதல் அவசியமானதாகும். இது தொடர்பாக, கொழும்பிலிருந்து அருவக்காளு வரை புகையிரதம் மூலம் குப்பைகளைக் கொண்டு செல்லும் ஆரம்பச் செயற்றிட்டமொன்று தற்போது நடைமுறையிலுள்ளது.

- **ஆண்டின் முதலரைப்பகுதியின் போது, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை கிராமிய பிரதேசங்களிலிருந்தான மக்களை பிரதான இலக்காகக் கொண்டு அதன் வீடமைப்பு அபிவிருத்திச் செயற்றிட்டங்களைத் தொடர்ந்தும் முன்னெடுத்தது.** இதன்படி, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையானது மாதிரிக் கிராமம், கிராம சக்தி, வடக்கு மற்றும் கிழக்கு மீள்குடியேற்ற வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டம் மற்றும் இந்திய கிராம சக்தி நிகழ்ச்சித்திட்டம் போன்ற பல்வேறு வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டங்களை 20,699 வீடமைப்பு அலகுகளை உள்ளடக்கிய 975 உடகமன செயற்றிட்டங்களின் கீழ் ஆரம்பித்திருந்தது. அதேவேளை, 2019இன் முதலரைப்பகுதியின் போது வீட்டுக் கட்டுமானத்திற்காக 20,699 காணி மனைகள் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் மூலம் ஒதுக்கப்பட்டுள்ளது.

- **உள்ளக நகரப் போக்குவரத்து முறைமையை வசதிப்படுத்துவதற்காக போக்குவரத்து அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் பெருநகர் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சின் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்டன.** அதற்கிணங்க, மென் புகையிரத போக்குவரத்துச் செயற்றிட்டத்தின் கீழ் யப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மையின் ஒத்துழைப்புடன் மாலபேயிலிருந்து கோட்டை வரையிலான உயர்த்தப்பட்ட புகையிரதப் பாதையின் பூர்வாங்கப் பணிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டன. மென் புகையிரத போக்குவரத்து செயற்றிட்டத்தின் மீண்டெழும் இருப்புக்கள் தொடர்பான சாத்தியவள கற்கைகள் நடைபெற்றுவருகின்றன. இதேவேளை, முன்மொழியப்பட்ட பெற்றா பல்மாதிரி போக்குவரத்து மையத்தின் சாத்தியவள கற்கையொன்று தொடர்ந்தும் 2019இன் முதலரைப்பகுதியின் போதும் முன்னெடுக்கப்பட்டது. மேலும், கடவத்தை பல்மாதிரிப் போக்குவரத்து மையத்தின் முதல் கட்டம் தொடர்பான கட்டடவாக்கற் பணிகளை மேற்குப் பிராந்திய போக்குவரத்து அபிவிருத்தி செயற்றிட்டத்தின் கீழ் 2019 இறுதியளவில் பூர்த்திசெய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.


- **2019இன் முதலரைப் பகுதியின் போது, தென்னாசியாவில் உலகத் தரம் வாய்ந்த நகரமொன்றை கட்டியெழுப்பும் நோக்குடன் கொழும்புத் துறைமுக நகர அபிவிருத்திச் செயற்றிட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.** 2019 சனவரியில் காணி மீட்புப் பணியானது பூர்த்தி செய்யப்பட்டதுடன் அதன் தொடர்ச்சியாக உட்கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் காணிச் சீரமைப்பு நடவடிக்கைகள் ஆரம்பமாகின. அதற்கிணங்க, 2019 யூன் இறுதியளவில் 5 சதவீத உட்கட்டமைப்பு அபிவிருத்தி செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. 2019 யூலையில் கொழும்புத் துறைமுக நகர செயற்றிட்டத்தின் கீழ் மீட்கப்பட்ட காணியை கொழும்புப் பிரதேச செயலக பிரிவின் கீழ் உள்ளடக்குவதற்கு பாராளுமன்றம் அனுமதி வழங்கியிருந்தது.

### சமூகப் பாதுகாப்பு வலையமைப்பு மற்றும் வறுமை ஒழிப்பு

- **வீட்டலகு வருமானம் மற்றும் செலவின அளவீடு 2016இற்கு அமைவாக, வறுமை எண்ணிக்கை விகிதமானது 2012/13இன் 6.7 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2016இல் 4.1 சதவீதத்திற்கு குறைவடைந்துள்ளது.** 2016இல், ஏறத்தாழ 0.8 மில்லியன் தனிநபர்கள் வறுமைக்கோட்டிற்கு கீழ் வசித்திருந்த வேளையில் 2012/13 ஆய்வுக் காலப்பகுதியில் 1.3 மில்லியன் ஏழை மக்கள் காணப்பட்டனர். வீட்டலகு வருமானம் மற்றும் செலவின அளவீடு 2016இன் படி, வறுமைச் சுட்டெண் மட்டமானது 1.7 சதவீத மிகக்குறைந்த

வரைபடம் 3.6


தலைக்குரிய வறுமை விகிதம்




*மூலம்:* தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்

வரைபடம் 3.7

சமுர்த்தி/ திவிநெகும நலன்புரி நிகழ்ச்சித்திட்டத்தின் செயலாற்றம்




*மூலங்கள்:* சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம்
நிதி அமைச்சு

மட்டமாக மேல் மாகாணத்தில் அறிக்கையிட்டிருந்ததுடன் மிகக் கூடிய மட்டமாக வட மாகாணத்தில் 7.7 சதவீதமாகக் காணப்பட்டது. மாவட்ட மட்டத்தில் நோக்குகின்றபோது மிகக் குறைந்தளவான வறுமை எண்ணிக்கைச் சுட்டெண்ணை பதிவுசெய்த மாவட்டமாகக் கொழும்பு காணப்பட்டதுடன் மிகக் கூடியதாக கிளிநொச்சி மாவட்டம் காணப்பட்டது. எவ்வாறாயினும், குடித்தொகையில் கணிசமான பங்கு வறுமைக்கோட்டிற்கு சற்று மேல் காணப்படுகின்றார்கள். எனவே, பொருளாதாரத்தின் மெதுவடைவு, இயற்கை அனர்த்தங்கள் அல்லது நோய்கள் போன்ற அதிர்வுகளை எதிர்கொள்கையில் அவர்கள் பாதிப்படையக்கூடியதுடன் மீண்டும் வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழ்கின்ற நிலையில் காணப்படுகின்றனர்.

- **2019இன் முதலரையாண்டின் போது அரசாங்கமானது நாட்டின் சமூக அபிவிருத்திக்கு ஆதரவளிப்பதற்காக வறுமை ஒழிப்பு, பட்டினியை முடிவுக்கு கொண்டு வருதலுடன் ஆண்டு முழுவதும் பாதுகாப்பான ஆரோக்கியமான மற்றும் போதுமான உணவை எல்லா மக்களும் பெற்றுக்கொள்தலை உறுதிப்படுத்தல் மற்றும் பாலின சமத்துவம் என்பவற்றுடன் தொடர்பான நிலைபெறத்தக்க அபிவிருத்தி இலக்குகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் பல்வேறுபட்ட செயற்றிட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தியது.** சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களமானது சமுர்த்தி நிவாரண நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 1.38 மில்லியன் பயன்பெறுநர் குடும்பங்களிற்கு ரூ.19.48 பில்லியனை பகிர்ந்தளித்திருந்தது. மேலும், குறைந்த வருமானமுடைய குடும்பங்களின் கடினமான சந்தர்ப்பங்கள் மற்றும் விசேட நிகழ்வுகளின் போது ஆதரவளிப்பதை நோக்காகக் கொண்ட சமுர்த்தி சமூகப் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 124,564 பயன்பெறுநர் குடும்பங்களிற்கு ரூ.477 மில்லியன் பகிர்ந்தளிக்கப்பட்டது. அதேவேளை, 2030ஆம் ஆண்டளவில் இலங்கையில் வறுமையை ஒழிக்கும் நோக்கில் 2019இற்கான வலுவூட்டல் திட்டமொன்றை சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம் தயாரித்திருந்தது. அதற்கிணங்க, 98,053 பயன்பெறுநர்களுக்கு ஆதரவளிப்பதற்காகப் பொருளாதார மற்றும் சமூக வலுவூட்டல் செயற்றிட்டங்களில் ரூ.142.6 மில்லியன் செலவழிக்கப்பட்டது. மேலும், 2019இன் முதலரையாண்டின் போது மாற்றுத்திறனாளிகளிற்கான தேசிய செயலகமானது மாற்றுதிறனாளிகளை பொருளாதார ரீதியில் வலுவூட்டும் நோக்குடன் மருத்துவ உதவிக்கான ஏற்பாடு, மாற்றுத் திறனுள்ள மாணவர்களுக்கான கல்வி உதவி மற்றும் மாற்றுத்திறனாளர்களுக்கான சுயதொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்துதல் போன்ற தமது முயற்சித் திட்டங்களை தொடர்ந்தும் முன்னெடுத்திருந்தது. மேலும், மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் உலர் வலய அபிவிருத்தி அமைச்சு 2019இன் முதலரையாண்டில் கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்களை இலக்காகக் கொண்டு ஊட்டச்சத்து கொடுப்பனவு நிகழ்ச்சித் திட்டத்தைத் தொடர்ந்தும் முன்னெடுத்திருந்தது. அதன்படி, 2019இல் இந்நோக்கத்திற்காக ரூ.5.5 பில்லியன் தொகையொன்று ஒதுக்கப்பட்டுள்ளதுடன் 2019 யூன் இறுதியிலுள்ளவாறாக 118,950 தாய்மார்கள் இத்திட்டத்தின் கீழ் பயன்பெறும் வகையில் ஊட்டச்சத்துக் கொடுப்பனவு நிகழ்ச்சித்திட்டத்திற்காக ரூ.2.4 பில்லியன் செலவழிக்கப்பட்டுள்ளது. மேலும், சிறுவர்களின் ஊட்டச்சத்து மட்டத்தை மேம்படுத்தும் பொருட்டு முன்பள்ளி மற்றும் ஆரம்பகாலக் குழந்தைப் பருவ வளர்ச்சி மைய பிள்ளைகளிற்கு பால் வழங்குவதற்காக ரூ.94 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.

- **சமூகப் பாதுகாப்பு வலையமைப்பு நிகழ்ச்சித் திட்டங்களின் சிறப்பான இலக்கிடலானது வறுமை ஒழிப்பிற்கு அத்தியாவசியமானதாகும்.** சமுர்த்தி உதவுதொகையொன்றைப் பகிர்ந்தளிப்பதற்காக உண்மையான வறிய மக்களை இனங்காணுதல் சவால் நிறைந்ததொரு பணியாகும். சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களமானது குடும்பத்தின் கல்வி, சுகாதாரம், வருமான மட்டம், சொத்துக்கள் மற்றும் வீட்டு நிலைமைகள் போன்ற எண்ணற்ற காரணிகளை கருத்திற் கொண்டு அளவிடப்படும் பல்பரிமான வறுமைப்புள்ளி

---

1 பல்பரிமாண வறுமைச் சுட்டெண்ணானது வறுமையை அளவிடுவதற்காக மூன்று பரிமாணங்களில் 10 குறிகாட்டிகளைப் பயன்படுத்துகிறது: கல்வி, ஆரோக்கியம் மற்றும் வாழ்க்கைத் தரங்கள் என்பன சமவிகிதத்தில் அளவிடப்படுகின்றன. உலகளாவிய பல்பரிமாண வறுமைச் சுட்டெண் அளவீடுகளானது நாடுகளிற்கிடையேயான ஒப்பீடுகளிற்கு பயனுடையதாகும். 2016இல் இலங்கைக்கான பல்பரிமாண வறுமைச் சுட்டெண் 0.009ஆகக் காணப்பட்டது. இது நாடொன்றில் அனுபவிக்கக்கூடிய மொத்த சாத்தியமான வறுமையில் 0.9 சதவீதத்தினர் இலங்கையில் ஏழை குடித்தொகையினராக காணப்படுவதை குறிக்கின்றது. தென்னாசியாவில் பாகிஸ்தான், வங்களாதேசம், இந்தியா, நேபாளம், பூட்டான், மாலைத்தீவு என்பவற்றிற்கான பல்பரிமாண வறுமைச் சுட்டெண் புள்ளிகள் முறையே 0.230, 0.196, 0.191, 0.126, 0.119 மற்றும் 0.018 ஆகும். இது ஏனைய தென்னாசிய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையின் பல்பரிமாண வறுமையானது 2016இல் மிகக் குறைவாக உள்ளதை பிரதிபலிக்கின்றது.

3

முறையை பயன்படுத்தி தீவு முழுவதுமாக 2016இல் ஆய்வொன்றை மேற்கொண்டிருந்தது. அதற்கிணங்க, 2019இல் சமுர்த்தி திட்டத்தில் 600,000 புதிய குடும்பங்களை உள்வாங்குவதற்கு முன்மொழியப்பட்டதுடன் தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களிற்கு சலுகைகளை வழங்கும் பணியானது தற்போது செயற்பாட்டிலுள்ளது. அதேவேளை, 2019 வரவுசெலவுத் திட்டத்திலிருந்தான ரூ.12 பில்லியன் ஒதுக்கீட்டுடன் 2019 யூலை 01 இலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் ஓய்வூதியக் கொடுப்பனவுகள் மீள்திருத்தம் செய்யப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், நாடு தழுவிய பங்களிப்பு ஓய்வூதியத் திட்டமொன்று இல்லாதது குடித்தொகையின் சமூக நலனைப் பாதிக்கும் வகையில் தொடர்கின்றதுடன் மேலதிக தாமதமின்றி இத்தேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டியுள்ளது.

- **2016இல் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட குடியியல் மற்றும் சுகாதார ஆய்வினூடாக சேகரிக்கப்பட்ட தரவுகளிற்கு அமைவாக பல்பரிமாண வறுமை எண்ணிக்கை விகிதமானது 2.4 சதவீதமாகக் காணப்பட்டது**[1]. அதேவேளை, 11.9 சதவீதமான குடித்தொகையினர் பல்பரிமாண வறுமைக்கு உள்ளாகக்கூடிய அபாயத்தில் காணப்படுவதாக அறிக்கையிடப்பட்டுள்ளதுடன் இலங்கையில் 0.2 சதவீத குடித்தொகையினர் கடுமையான பல்பரிமாண ஏழைகளாகக் காணப்பட்டனர்.

## எதிர்பார்க்கப்படும் அபிவிருத்திகள்

- **2019 செத்தெம்பர் மாதத்தில் திறந்துவைக்கப்பட்ட தெற்காசியாவின் அதியுயர்ந்த சுயமான-துணைபுரியப்பட்ட கட்டமைப்பான கொழும்பு தாமரைக் கோபுரம் பகிர்ந்தளிப்பு அடிப்படையில் உயர்ந்தளவான வசதிகளை வழங்குவதனூடாக தொலைத்தொடர்பூட்டல் பணிகளை வழங்குகின்ற அனைவருக்கும் பயனளிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.** கொழும்புத் தாமரைக் கோபுரத்தின் உட்கட்டமைப்புக்கள் பூச்சியளவான வேலையில்லா நேரச் சம்பவங்களை உறுதிப்படுத்தும் நோக்கில் கண்ணாடி இழை இணைப்புக்களுடன் கட்டியெழுப்பப்பட்டுள்ளதுடன் தேவையான தொலைத்தொடர்பூட்டல் கருவிகளுடன் முற்றுமுழுதாக பொருத்தப்பட்டுள்ளது. கொழும்புத் தாமரைக் கோபுரம் தனிப்பட்ட தொலைத்தொடர்பூட்டல் வழங்குநர்களுக்கான செலவினங்களைக் குறைக்கின்ற அதேவேளை ஊடுகடத்தல் செயன்முறையின் வேகம், நெகிழ்வுத்தன்மை மற்றும் வினைத்திறன் என்பவற்றை அதிகரிப்பதுடன் வலையமைப்புக்களின் உள்ளடக்கத்தை விரிவாக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. அதேவேளை, அதிகளவான வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் மற்றும் உள்நாட்டு பார்வையாளர்களைக் கவருகின்ற அதேவேளை கொழும்புத் தாமரைக் கோபுரத்தை இலங்கையின் 'டிஜிட்டல் தொலைக்காட்சி கோபுரம்' என்றளவிற்கு மேம்படுத்தும் நோக்கில் தனியார் - அரசாங்க பங்குடமை அடிப்படையில் கொழும்புத் தாமரைக் கோபுரத்தில் வணிக வளாகங்கள், வரவேற்பு மண்டபங்கள் மற்றும் உணவகங்கள் போன்ற பல்வேறுபட்ட துணை வசதிகளை நிறுவிக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. எழுச்சியடைந்துவரும் புத்தாக்க தொழில்நுட்பங்களிலிருந்தான முழுமையான இயலளவுச் சாத்தியங்களின் நன்மைகளைப் பெற்றுக்கொள்கின்ற அதேவேளை பரினமித்துவரும் டிஜிட்டல் பொருளாதாரச் செயற்பாடுகளில் பங்கேற்றுக்கொள்வதற்கு அரசாங்கம் அதேபோன்று தனியார் துறை பங்குதாரர்கள் கொழும்புத் தாமரைக் கோபுரத்தில் நிறுவப்பட்டுள்ள நவீன தொலைத்தொடர்பூட்டல் வசதிகளை நடைமுறைக்கேற்ற வகையில் பயன்படுத்தல் வேண்டும்.

- **இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் இலாபத்தன்மையை நிச்சயப்படுத்துகின்ற அதேவேளை அதிகரித்துச் செல்லும் உள்நாட்டு பெற்றோலியக் கேள்வியைப் பூர்த்தி செய்யும் நோக்கில் சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையினை விரிவாக்குவதற்கும் நவீனமயப்படுத்துவதற்குமான திட்டங்கள் தற்போது இடம்பெற்று வருகின்றன.** கடந்த 10 வருட காலப்பகுதியில் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகளுக்கான உள்நாட்டுக் கேள்வி சராசரியாக ஆண்டொன்றுக்கு 3.0 சதவீதம் அதிகரித்துள்ளதுடன் இக்கேள்வியானது தொடருகின்ற பொருளாதார விரிவாக்கங்களுடன் வளர்ச்சியடைந்து செல்லுமென எதிர்பார்க்கப்படுகின்றது. 50 ஆண்டு பழமைவாய்ந்த வசதியைக் கொண்டுள்ள சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையே இலங்கையில் காணப்படுகின்ற ஒரேயொரு சுத்திகரிப்பு ஆலையாவதுடன் இது நாட்டின் பெற்றோலியக் கேள்வியில் 30 சதவீதத்தை மாத்திரம் பூர்த்திசெய்வதற்கே இயலளவைக் கொண்டுள்ளது. பிரதான மசகெண்ணெய் வடிகட்டல் நெடுவரிசையை பதிலீடு செய்தவற்கான முன்னிறுத்தி பொறியியலாளர் வடிவமைப்பு, ஐதரசனைப் பயன்படுத்தி சுத்திகரிக்கப்பட்டு உருவாக்கப்படும் டீசல், மற்றும் சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் பிளாத்தினம் மூலமான சுத்திகரிப்பு அலகு என்பனவற்றை வடிவமைப்பதற்கான பொருத்தமான வடிவமைப்பாளரொருவரை தெரிவுசெய்வதற்கு கோரலொன்று அழைக்கப்பட்டுள்ளது. சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையின் விரிவாக்கம் மற்றும் நவீனமயப்படுத்தல் செயற்றிட்டமானது 2020இன் நடுப்பகுதியில் நிறைவுசெய்யப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது புதிய சுத்திகரிப்பு ஆலையொன்றை நிறுவுதலானது சார்பளவில் குறைந்த செலவில் கணிசமானளவான மேலதிக சேகரிப்புக்களுடன் உயர் பெறுமதிவாய்ந்த பெற்றோலிய உற்பத்திகளுக்கு குறைந்த தரமுடைய மசகெண்ணெயை சுத்திகரிப்பதற்கும் வசதியளிக்கும்.